Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 6 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 16 (22.11.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 53

சொலெக்ஸ்
மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்கவும்,
செயற்கை மாபிள் கண்களுக்கும்
மற்றும் பல் கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு
கிளிப்ஸ் செய்து கொடுத்தல்.
லக்ஷறி பல் கட்டுமிடம்
232 /A, கண்டி வீதி, சாவகச்சேரி.
(சி-174)

ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலகம் அமைந்த

## ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக மக்களும் மாணவரும் மறியல்!

### கலகம் அடக்கும் விசேட பொலிஸாரும் பணியில்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் மக்களின் எதிர்ப்பையும் மீறி அங்கு தரையிறங்கியுள்ள ஈ.பி.டி.பி.யினரை வெளியேறும்படி கோரி, நெடுந்தீவில் மக்கள் நடத்திவரும் போராட்டத்திற்கு ஆதரவாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து ஈ.பி.டி.பி.யினரை வெளியேறக் கோரியும், ஸ்ரீதர் தியேட்டர் கட்டடத்தில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்திற்கு முன்பாக பொதுமக்களும் பல்கலைக் கழக மாணவர்களும் இணைந்து நேற்றுக்காலை மறியற்போராட்டம் நடத்தினர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் நல்லூர்க் கந்தசாமி கோயில் முன்றலில் பொது அமைப்புக்களினதும், மனிதநேய அமைப்புக்களினதும் பிரதிநிதிகளும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் கடும் மழையின் மத்தியிலும் ஒன்றுகூடி அங்கிருந்து 10.30 மணியளவில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஓட்டோ ஒன்று முன்செல்ல பேரணியை ஆரம்பித்தனர்.

மூன்று பேருந்துகளில் பொதுமக்களும், யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் பேரணியில் சென்றனர்.

ஸ்ரீதர் தியேட்டர் பகுதியை அடைந்த இவர்கள் ஈ.பி.டி.பி.யின் தலைமையலுவலக வாசலைத் தடை செய்து மறியற் போராட்டத்தில் ஈடு

(10ஆம் பக்கம் பார்க்க)





ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக நடைபெறும் மறியற் போராட்டத்தில் திரண்ட மாணவர்களையும் தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரகுமாருடன் பொலீஸார் வாக்குவாதப்படுவதையும் கலகமடக்கும் பொலிஸாரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லிவிங்ஸ்டன்)*

நெடுந்தீவு கொந்தளிப்பு நிலை தொடர்பாக

# ஈ.பி.டி.பியினரை சந்திக்க பிரதமர் ரணில் அழைப்பு!

விண்ணாணம் விநாசியர்



இனியாவது கோணேசரை நிம்மதியாக் கும்பிட வாய்ப்புக் கிடைக்கட்டும்...

## ஏனைய தமிழ்க் கட்சியினருடனும் பேச்சு

(கொழும்பு)

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் (ஈ.பி.டி.பி.) இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். நெடுந்தீவில் உருவாகியிருக்கும் பதற்றநிலை சம்பந்தமாக இச்சந்திப்பின்போது முக்கியமாகக் கருத்துப் பரிமாறப்படவுள்ளது.**

பிரதமரின் அலுவலகத்திலிருந்து நேற்று மாலை கிடைத்த அழைப்பையேற்று இன்று காலை இச்சந்திப்பிற்காக ஈ.பி.டி.பித் தூதுக்குழுவொன்று பிரதமரின் அலுவலகத்திற்குச் செல்கிறது.

நெடுந்தீவில் ஏற்பட்டிருக்கும் பதற்றத்தைத் தணிப்பதற்கும், சுமுகமான நிலையை குடாநாட்டில் ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பது குறித்தும் இப்பேச்சுக்களின்போது ஆராயப்படவுள்ளது.

இதேவேளை - தமிழ்க் கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர்

(10ஆம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீது

## தாக்குதல் நடத்திய 10 பேரை கைது செய்ய ஜனாதிபதி பணிப்பு!

(கொழும்பு)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி உறுப்பினர்களைத் தாக்கியவர்களை உடனடியாக கைதுசெய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி உறுப்பினர்களை அங்கு வைத்துத் தாக்கிய பத்துப் பேரின் பெயர் விபரங்களை, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தம்மிடம் தந்துள்ளதாகவும் இந்தப் பத்துப் பேரையும் உடனடியாக நெடுந்தீவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பொலிஸ் மா அதிபரை பணித்துள்ளார்.

(01)

## கோணேசர் தீர்த்தப் பகுதியிலிருந்து படையினர் விலகுவதற்குச் சம்மதம்!

### திருமலை பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் இணக்கம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் திருக்கோணேசர் ஆலய தீர்த்தமான பாபநாசக் கிணறு அமைந்துள்ள பிரதேசத்தில் இருந்து இராணுவ நிலைகள் விரைவில் அகற்றப்படும் என நேற்று திருகோணமலையில் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் இராணுவத் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டதாக, விடுதலைப் புலிகளின் திருக்கோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.திலக் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப் புக்குழு திருக்கோணமலை அலுவலகத்தில் நேற்றுக் காலை உபகுழுவின் கூட்டம் நடைபெற்றது. இதில் தமி

(10ஆம் பக்கம் பார்க்க)



திலக்கும் பிராந்தியக் கடற்படைத் தளபதி திஸநாயக்கவும்



நேற்று நடந்த திருமலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டம்

## ஈ.பி.டி.பி. தென்மராட்சி அலுவலகம் நேற்று இரு முறை தாக்கப்பட்டது!

### தாக்கியோர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

(சாவகச்சேரி)

நுணாவிலில் அமைந்துள்ள ஈ.பி.டி.பியின் தென்மராட்சிப் பிரதேச அலுவலகம் இனந்தெரியாத நபர்களால் நேற்று இரு முறை தாக்குதலுக்குள்ளானது.

நேற்று அதிகாலை 12.15 மணியளவில் ஈ.பி.டி.பி. அலுவலகத்தினுள் திடீரென நுழைந்த இனந்தெரியாத நபர்கள் அலுவலகத்தில் இருந்த பொருட்களை அடித்து நொறுக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து அங்கிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் தப்பியோடிவிட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் உண்ணாவிரதம் மழையின் மத்தியில் தொடர்கிறது!

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியை வெளியேறுமாறு கோரி நெடுந்தீவில் நடைபெறும் மக்களின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் கொட்டும் மழையிலும் தொடர்ந்தது.

இப்பகுதியில் வெள்ளம் நிறைந்துள்ளதால், மக்கள் மண்போட்டு உயர்த்தி பந்தல் போட்டு, அதனுள் இருந்து தமது உண்ணாவிரதப்

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517919
(சி-148)

# ஒஸ்லோ மாநாட்டுக்கு இந்தியா செல்லுமா? விவகாரம் இன்னமும் பரிசீலனையில்!

## இந்திய வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் தகவல்

(புதுடெல்கி)

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந்தியா பங்கேற்பது குறித்து இன்னமும் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நவ்ரேஜ் சர்ணா தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இந்தியாவுக்கு விஜயம் செய்யும் அமைச்சர் மிலிந்த மொறகொட, இந்திய நிதியமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் செய்து கொண்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே, மிலிந்த மொறகொட சமாதானப் பேச்சுக்கள் குறித்து இந்தியத் தரப்புக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

அத்துடன், ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந்தியாவைப் பங்கேற்க வைப்பதற்கு மிலிந்த மொறகொட முயற்சிகளை மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### பயணிகள் கப்பல் சேவை - முஸ்லிம்கள் நலன் பேணல்

# இந்திய அமைச்சர்களுடன் பேச ஹக்கீம் புதுடெல்கி சென்றார்!

(கொழும்பு நிருபர்)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையைத் தொடங்குவது தொடர்பாக ஆராய்வதற்காகத் துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நேற்று அதிகாலை இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்ற அமைச்சர் ஹக்கீம், தூத்துக்குடித் துறைமுகத்தில், விரைவாக பயணிகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து- பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது தொடர்பாக இந்திய அதிகாரிளுடன் பேச்சுக்களை நடத்துவார்.

இந்திய கப்பற்துறை அமைச்சர் கோயலாவையும் இவர் சந்தித்து கப்பல்சேவை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக ஆராயவுள்ளார்.

அத்துடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கைச் சந்தித்து, இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகள் தொடர்பாகவும், முஸ்லிம் மக்களின் நலனைப் பேணுவது தொடர்பாகவும் அவர் பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரியவருகின்றது.

## தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - 2002

| | தவறுகள் | திருத்தம் |
|---|---|---|
| 08.11.2002 | | |
| *யாழ்.* | | |
| 1. யா/யா/509 | திரு.அருணாசலம் பரமசிவம் | திரு.அருணாசலம் பரசிவம் |
| *மானிப்பாய்* | | |
| 1. யா/மா/373 | திருமதி.பியற்றில் இராசகுருநாயகி குலேந்திரன் | திருமதி.பியற்றில் இராசகுலநாயகி குலேந்திரன் |
| *காரைநகர்* | | |
| 1. யா/கா/753 | திரு.கந்தையா லகுமார் | திரு.கந்தையா லகுகுமார் |
| 09.11.2002 | | |
| *தெல்லிப்பளை* | | |
| 1. யா/தெ/1695 | திரு.முத்துக்குமார் கந்தசாமி | திரு.முதுதுக்குமாரு கந்தசாமி |
| *பருத்தித்துறை* | | |
| 1. யா/பரு/814 | திருமதி.செல்வசிரோன்மணி ராமேஸ்வரன் | திருமதி.செல்வசிரோன்மணி இராமேஸ்வரன் |
| 2. யா/பரு/3092 | திருமதி.யசிந்தா ஜீவபாலநேசன் | திருமதி.ஜசீந்தா ஜீவபாலநேசன் |
| *சங்கானை* | | |
| 1. யா/ச/35 | திருமதி.மகேஸ்வரன் சுகுமாரன் | திருமதி.மகேஸ்வரி சுகுமாரன் |
| 2. யா/ச/67 | திருமதி.ஞானம்மா லோகேஸ்வரன் | திருமதி. ஞானம்மா லோகீஸ்வரன் |
| 3. யா/ச/821 | திரு.தம்பிப்பிள்ளை தங்கராசா | திரு.தம்பிப்பிள்ளை தங்கராஜா |
| 10.11.2002 | | |
| *கரவெட்டி* | | |
| 1. யா/க/1129 | திருமதி.புவனேஸ்வரி ஆனந்தராஜா | திருமதி.புவனேஸ்வரி ஆனந்தராசா |
| 2. யா/க/3445 | திருமதி.சிவபாக்கியம் நாகமுத்து | யா/க/3545 |
| 11.11.2002 | | |
| *சாவகச்சேரி* | | |
| 1. யா/சா/4894 | திரு.செல்லையா ஜெயராசா | திரு.செல்லையா ஜெயராஜா |
| வேலணை | | |
| 1. யா/வே/754 | திருமதி.கலாவதி செல்வகுணராசா | திருமதி.கலாவதி செல்வகுணராஜா |
| 2. யா/வே/2436 | இரத்தினம் தங்கவேலு | யா/வே/2439 திருமதி இரத்தினம் கதிரவேலு |
| 14.11.2002 | | |
| *வெளியகல்வு* | | |
| 1. யா/வெ/1060 | செல்வி ராணி தீனதயாளன் | ராணி தீதையாளன் |

சிறுவர் முதற் பெரியோர் வரை
நவநாகரிகத்திற்கேற்ப கண்கவர் ஆடைகளைப்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
புடைவையகம் & ரெயிலறிங்
77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**WANTED**
**HARTLEY ENGLISH ELOCUTION CLUB**
(English Language Training Centre)
We need a Teacher of English who has wide Experience in training Students in elocution and speech to be in charge of the Club.
Applications Closing 10th December 2002.
JT Secretary,
Hartley College
Past Pupils' Assn.
Pointpedro,
20.11.2002.
(C-196)

### பனையிலிருந்து வீழ்ந்து படுகாயம்

சீவல் தொழிலுக்காகப் பனை மரத்தில் ஏறியவர், சறுக்கி வீழ்ந்து படுகாயமுற்றநிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சின்னத்தம்பி சிவராசா (வயது 34) என்ற தொழிலாளியே மழை நேரத்தில் பனைமரத்தில் ஏறி சறுக்கி வீழ்ந்து காயமடைந்தவராவார்.

ராஜா
யாழ்ப்பாணம்.

தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், மந்திரா நடித்த
லவ் ருடே
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
UNIVERSAL SOLDIER
(சி-139)

# விளையாட்டு

## ஜோத்பூர் ஒரு நாள் போட்டியில் இந்தியா 3 விக்கெட்டுக்களால் வெற்றி!


சந்தர்போல்

(ஜோத்பூர்)

ஜோத்பூரில் நேற்று நடைபெற்ற இந்திய - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியில் இந்தியா 3 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணி 46.3 ஓவரில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து ஆடிய இந்திய அணி 46.2 ஓவரில் 7 விக்கட்டுக்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. நேற்றைய ஆட்டத்தில் சஞ்சய் பாங்கரின் ஆட்டம் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. இவர் ஆட்டமிழக்காது 38 பந்து வீச்சுக்களில் 32 ஓட்டங்களைப் பெற்றார். ராகுல் ட்ராவிட் 58 ஓட்டங்களையும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சந்தர்போல் 58 ஓட்டங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித்தொடரில் இரு அணிகளும் 3 வெற்றிகளைப் பெற்று சமநிலையில் உள்ளனர்: ஞாயிறன்று விஜயவாடாவில் நடைபெறும் இறுதி ஒருநாள் போட்டியில் இத்தொடரில் வெற்றிபெறும் அணி எது என்பது தெரியவரும்.


நேற்று மூன்று விக்கட்டுக்களை வீழ்த்திய முரளி கார்த்திக்.

## ஆஷஸ் கிண்ண டெஸ்ட்; இங்கிலாந்து 295 ஓட்டங்கள்!


மைக்கல் வாகன்

(அடலெய்ட்)

ஆஷஸ் கிண்ணத்துக்கான டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று அடலெய்ட் நகரில் ஆரம்பமானபோது, இங்கிலாந்து அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலாவது நாள் ஆட்டத்தின் முடிவில், இங்கிலாந்து அணி நான்கு விக்கட்டுக்கள் இழப்புக்கு 295 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இங்கிலாந்து அணியின் சார்பில் விளையாடிய ட்ரஸ் கோதிக் 35 ஓட்டங்கள், வாகன் 3 சிக்ஸர்கள், 22 பவுண்டரிகள் அடங்கலாக 177 ஓட்டங்கள், நஸார் ஹுசேன் 47 ஓட்டங்கள், புச்சர் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

அவுஸ்திரேலிய அணியின் சார்பில் பந்துவீச்சில் ஷேன்வோர்ன் 2 விக்கட்டுக்களையும் மக்ராத் மற்றும் பைக்கல் ஆகியோர் தலா ஒரு விக்கட்டையும் வீழ்த்தினர்.


வோர்ன்

### வலுவிழந்தோருக்கான போட்டியில்

## தேசிய மட்டத்தில் வவுனியா மாணவர்களுக்குப் பதக்கம்!

தேசிய மட்டத்தில் வலுவிழந்தோருக்காக நடைபெற்ற சன்சயின் விளையாட்டுப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இரு செவிப்புலன் வலுவற்ற சிறுவர்கள் பதக்கங்களை வென்றுள்ளனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த கிருபானந்தமூர்த்தி நிதர்சன் என்ற செவிப்புலன் வலுவற்ற சிறுவன் பதின்மூன்று வயதிற்குட்பட்டவர் பிரிவில் நூறு மீற்றர், இருநூறு மீற்றர் ஆகிய ஓட்டப் போட்டிகளில் தங்கப்பதக்கத்தையும் இரவீந்திரன் தனுசா என்ற செவிப்புலன் வலுவற்ற சிறுமி பதின்மூன்று வயதிற்குட்பட்டவர்கள் பிரிவில் இருநூறு மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

இவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்றது. (03)

### 'புத்தரின் பெயரால்' படம் குறித்த

## விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க சமாதானச் செயலகம் கோரியது

(கொழும்பு)

ஒஸ்லோ திரைப்பட விழாவில் திரையிடப்பட்டுள்ள 'புத்தரின் பெயரால' என்ற ஆங்கிலப் படம் குறிதத முழுமையான தகவல்கள் அடங்கிய விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சமாதானச் செயலகம், வெளிவிவகார அமைச்சைக் கேட்டுள்ளது.

இந்தத் திரைப்படத்தில் புத்தரைத் தூஷிக்கின்ற வகையில் ஏதேனும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளனவா என்றும், ஏனைய முழுத் தகவல்களை வழங்கும்படி வெளிவிவகார அமைச்சு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்தத் திரைப்படம் குறித்த வெளிவிவகார அமைச்சின் முழுமையான அறிக்கை கிடைத்த பின்னரே இது தொடர்பாகக் கருத்துக்களைத் தம்மால் வெளியிட முடியும் என சமாதானச் செயலகம் அறிவித்துள்ளது.

# மட்டு. பேச்சுக்கள் ஆக்கபூர்வமானது கருணா – கொட்டேகொட தெரிவிப்பு!


வவுணதீவில் நேற்றுமுன்தினம் நடந்த மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் கேணல் கருணாவின் அணுகுமுறைகள் ஆக்கபூர்மானதாக இருந்ததாக அரச தரப்புக் குழுவில் இடம்பெற்றிருந்த மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொட தெரிவித்தார்.

பொதுக்கட்டடங்களில் இருந்து படையினரை உடனடியாக வெளியேற்றி வேறு இடங்களிற்கு கொணடு செல்வதில் உள்ள பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அதேவேளை நாம், தொடர்ந்தும் இராணுவம் இப்பகுதியில் இருப்ப எந்தத் தடையும் கிடையாது எனவும் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

மட்டக்களப்பில் நடந்த பேச்சுக்களில் கலந்துகொண்ட இருதரப்புகளின் தளபதி கேணல் கருணா -





மட்டு. பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் கேணல் கருணா மற்றும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொட ஆகியோரை முதலாவது படத்திலும், பேச்சுக்களின் முடிவில் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் சந்திப்புக் குறித்த ஆவணத்தைத் தயாரிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.





கூட்டத்தில் கலந்துகொண்ட தளபதி கேணல் கருணா, கௌசல்யன், லெப்.கேணல் ரமேஸ், தளபதி நிலாவினி ஆகியோரை முதற்படத்திலும், பேச்சுகளில் பங்குகொண்ட அரசுத்தரப்புக் குழுவினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

சந்திப்பின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், இதேநிலையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டால், இறுக்கமான கட்டுப்பாடுகளில் தளர்வுகளை கொண்டு வர வாய்ப்புக்கள் உள்ளன என்றும், பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் தங்கியுள்ள 345 தனியார் வீடுகள், 30 பொதுக்கட்டடங்களில் இருந்து படையினர் விலக வேண்டும் எனப் புலிகள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. வேகமாக இந்த இடங்களில் இருந்து படையினரை வெளியேற்றுவதற்கும் முடிவு செய்யப்பட்டதென மேஜர் ஜெனரல் கொட்டேகொட அப்போது தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக கருத்து தெரிவித்த புலிகளின் தளபதி ... தால், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கூட்டத்தில் அரச தரப்பின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தோம்.

மக்களின் இந்தப் பிரச்சினையைக் கட்டம் கட்டமாக தீர்க்க இராணுவத்தரப்பு ஒத்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் உள்ள இவ்வேளையில் உடனடியாக படையினரை வெளியிடங்களுக்கு மாற்றுவதில் உள்ள சிக்கல்களைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

இந்தப் பேச்சுகள் ஆக்கபூர்வமானதாக நடைபெற்றமை மகிழ்ச்சிக்குரியது எனத் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்ட புலிகளின் உயர் தளபதி ஒருவர் கருத்து வெளியிடுகையில், மாவட்டத்தில் எந்தப் பகுதியிலும் முஸ்லிம் மக்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடலாம் என்றும், அதற்கு எந்தத் ... களுமே போதிய தயார்ப்படுத்தல்களுடன் வந்திருந்தன. குறிப்பிட்ட, தெளிவான கோரிக்கைகள் மட்டும் முன்வைக்கப்பட்டதால் இலகுவாகத் தீர்மானங்களை எடுக்க முடிந்தது.

இருதரப்பும், மற்றைய தரப்பின் பிரச்சினைகளைப் புரிந்து செயற்பட்டதால் மக்களின் நலன் குறித்த தீர்மானங்களில் ஒத்த கருத்து நிலவியது.

இந்நிலை நீடிக்குமானால் தெளிவான, யதார்த்தபூர்வமான தீர்வினை நோக்கிப் பேச்சுக்கள் நகரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27

மாவீரர்களே! உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகின்றது; உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகின்றது.



வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

## வரலாற்றில் தனிச்சிறப்புப் பெறும் தமிழீழ மாவீரர் நாள்

1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் நாளை முதலாவது தமிழீழ மாவீரர் நாளாகத் தமிழீழம் உணர்வார்ந்த நிலையில் கடைப்பிடித்தது. அன்றிலிருந்து தமிழீழத்தின் மிகப் பெரிய நிகழ்வாக, எழுச்சியாக, புனிதமாக, உணர்வார்ந்த நிகழ்வாக தமிழீழ மாவீரர் நாள் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

ஏனைய நாடுகளில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுவதற்கும், தமிழீழ மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுவதற்கும் பெரும் வேறுபாடுகளுண்டு. ஏனைய நாடுகளில் எல்லாம் விடுதலைக்குப் பின் அமைந்த அரசுகளால் விழாக்கள் எடுக்கப்படுகின்றனவே தவிர, போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலங்களில் விழாக்கள் எடுக்கப்படு வதில்லை. ஆனால் விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையிலும் எதிரியின் அச்சுறுத்தல்கள், தாக்குதல்கல்களுக்கிடையிலும், பல்வேறு நெருக்கடிகளுக்கிடையிலும் போராட்டத்தையும் நடாத்திக் கொண்டு தமிழீழ மக்கள், மண்ணின் விடிவிற்காகத் தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களை எழுச்சியோடு நினைவு கூர்ந்து வருகின்றனர். மாவீரர்களின் பெற்றோர்களை, குடும்பத்தினரைப் போற்றிச் சிறப்பிக்கின்றனர்.

வீரச்சாவடையும் தமிழீழ மாவீரர்களது வித்துடல்கள் மாவீரர் துயிலும் இல்லங்களில் கல்லறைகளில் விதைக்கப்பட்டும், நடுகற்கல் நாட்டப்பட்டும் வழிபாடியற்றப்படுகிறது. மாவீரர் நாளில் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர், மாவீரர்களை நினைவு கூறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டு அன்று தமிழீழ மக்களால் போற்றி மதிப்பளிக்கப்படுகின்றனர். உலகில் எங்குமே தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வு போல மாவீரர்களை நினைவுகூறும் நிகழ்வுகள், அவர்களின் பெற்றோரும், குடும்பத்தினரும், போற்றப்பட்டு மதிப்பளிக்கப்படும் நிகழ்வுகள் நடைபெற்றதாகவோ, நடைபெறுவதாகவோ வரலாறில்லை.

### மாவீரர் எழுச்சி நாட்களின் நிகழ்வுகளும், நடைமுறை ஒழுங்குகளும்

1989ஆம் ஆண்டில் நவம்பர் 27ஆம் நாளை மாவீரர் நாளாகவும், 1990ஆம் ஆண்டில் இருந்து 1994ஆம் ஆண்டுவரை நவம்பர் 21ஆம் நாளிலிருந்து 27ஆம் நாள் வரை மாவீரர் நாளாகவும் (வாரமாகவும்) தமிழீழ மக்களால் எழுச்சி நிகழ்வாக நடைபெற்றுவந்த தமிழீழ மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் 1995 ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 25 ஆம் நாள் முதல் 27 நாள்வரை மூன்று நாட்களில் எழுச்சி நாட்களாக கடைப்பிடிக்கப்படுகின்றன.

- தமிழீழ மாவீரர் பணிமனை.

# மீண்டும் ஆயுத வன்செயல்களில் இறங்க ஜே.வி.பியினர் திட்டம்!

## வடமேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜே.வி.பி. மீண்டும் ஆயுத வன்செயல்களில் இறங்குவதற்குத் திட்டம் வகுத்து வருவதாக வட - மேல் மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் அசோக வடிவமங்காவ தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆயுதப் பயிற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று அவர் மேலும தெரிவித்தார்.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவரின் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமக்கு எதிரானவர்களைக் கொலை செய்வதுதான் அவர்களின் கொள்கையாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## தமிழீழ வைப்பகம் குறித்து நாடாளுமன்றில் சூடான விவாதம்

(கொழும்பு நிருபர்)

'தமிழீழ வைப்பகம்' பற்றிய விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சூடு பிடித்திருந்தது.

நிதி ஒதுக்கீடுகள், வங்கிகளின் செயற்பாடுகள் சம்பந்தமான நேற்றைய விவாதத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரான திலின பண்டார தென்னக்கோன் - தமிழீழ வைப்பகம், மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படுமா எனக் கேள்வியெழுப்பினார்.

பிரமுக வங்கி, அரசின் தனிப்பட்ட பகைமை காரணமாக மூடப்பட்ட நிலையில், தமிழீழ வைப்பகத்தை அனுமதிக்க மத்திய வங்கி முன்வருமா என்றும் அவர் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி - இது பறறிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும், மத்திய வங்கியில் தமிழீழ வைப்பகத்தைப் பதிவு செய்தல் தொடர்பான செய்திகளில் உணமையில்லை என்றும் கூறினார்.

## 450 குண்டுகள் இந்தவருடத்தில் மீட்கப்பட்டதாக அறிவிப்பு

இலங்கையில் பல்வேறு இடங்களில் 450 குண்டுகள் இந்த வருடத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்று பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம், தியத்தலாவ, காலி, குருணாகல் மற்றும் பிரதேசங்களில் பொலிஸ் சுற்றி வளைப்பின் போது இந்தக் குண்டுகள் கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பொ.ஐ.முன்னணி ~ ஜே.வி.பி. கூட்டு வேலைத்திட்டம் தயார்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி, யும ஜே.வி.பி.யும் இணைந்த வேலைத திட்டம் ஒன்றை அடுத்த மாதம் 6ந் திகதி - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான ஜே.வி.பியின் அறிக்கை ஏற்கனவே தயாரிக்கப் பட்டுவிட்டதாகவும்,

பொ.ஐ.முயின் அறிக்கையை மங்களசமரவீர, நிமால் சிறிபால டீ சில்வா, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தயாரித்து வருவதாகவும் தெரியவருகிறது.

## 30 பாடசாலை மாணவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய ஆசிரியர் விளக்க மறியலில்!

முப்பது பாடசாலை மாணவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக 44 வயதுடைய ஆசிரியர் ஒருவரை நீர்கொழும்புப் பொலிசார் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர்.

இவர் பாடசாலை மாணவர்களை விசேட வகுப்புகள் என அழைத்து மாணவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாகவும், பாதிக்கப்பட்ட மாணவர்கள் 9 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக நீர்கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, சந்தேகநபரை நவம்பர் 27 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதீவானால் உத்தரவிடப்பட்டுள்ளது.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.58 |
| சுபஹ் | 5.13 |
| உதயம் | 6.33 |
| லுஹர் | 12.28 |
| அஸர் | 3.50 |
| ம.்.ரிப் | 6.21 |
| இஷா | 7.34 |

## எழுத்தாளர்கள், ஓவியர்களின் அமைதி மாநாடு யாழ்ப்பாணத்தில்

இலங்கையில் உள்ள புகழ் பெற்ற எழுத்தாளர்கள் மற்றும் ஓவியர்கள் கலந்து கொள்ளும் அமைதி மாநாடு எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வை வலியுறுத்தும் இந்த மாநாட்டில் தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும், சிங்கள மாணவர்களுக்கு தமிழும் கற்பிக்கும் திட்டத்தை வலியுறுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# அதிர்ஷ்ட வாரம்

## 22-11-2002 தொடக்கம் 28-11-2002



### மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

இவ்வாரத்தில் முதல் மூன்று நாட்களில் உடனலம், உளநலம் நன்று, எடுத்த முயற்சி சித்தி, திருமண வைபவங்களில் பங்குகொள்ளல், நண்பர்கள், உறவினர் மகிழ்ச்சி, இளைய சகோதர உறவு ஆகிய பலன்களுடன் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் வாகனச்செலவு, உறவினரால் செலவு, கொடுக்கல் வாங்கல் பிணக்கு ஆகிய பலன்களுடன், கடைசி இரு தினங்களில் பொதுச் சேவையில் மனஸ்தாபம், தாழ்வு மனப்பான்மை ஆகிய பலன்களுடன் பிதாவின் உடனலம் சமம், மாதா உடனலம் சீரற்றதாகவே காணப்படும். கணவன் மனைவி உடனலம் சமம். புத்திரர்களுக்கு கடைசி இரு தினங்களும் உடனலம் பாதிக்கப்படும். திருமணப் பேச்சுக்கள் வேகம் குறைந்து காணப்படும். செய்தொழில் விருத்தி, கடைசி இரு தினங்களும் பலன்குறைவு. தொழிலாளர்களுக்குச் சமனான வாரம், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும். வர்த்தகர்களுக்கு சமபலனைக் கொடுக்கும்.



### இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.**

இவ்வாரம் பணவரவு குறைவு, வந்தாலும் சேமிக்கும் சிந்தனையிராது. பெண்களினால் சண்டை, வாக்குவாதம், வைத்தியச் செலவு, வாகனச்செலவு, தேவையற்ற செலவு ஆகிய பலன்களுடன் திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களில் எடுதத காரியம் வெற்றி, விருந்தினர் உறவு, உடல்குளிர்ந்த உணவுடன் தாம்பூலம், பெண்கள் விதவிதமான உடைகள் அணிவதில் மகிழ்ச்சி, பிதாவின் உடனலம் சமம், மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி உடனலம் சமம், புத்திரர் சுகம் சமம், திருமணப் பேச்சுக்கள் முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் வார இறுதியில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் சமம்.



### மிதுனம்

**மிருகசீரிடம் 2,3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்**

இவ்வாரம் உடனலம் நன்று, செய்தொழில் மேன்மை, சுபகாரியங்களில் பங்கு, நண்பர்கள், உறவினர் மகிழ்ச்சி, ஆடை ஆபரண அலங்காரங்கள், உடல் குளிர்ந்த உணவு, தாம்பூலம் தரித்தல் ஆகிய பலன்களுடன் வார நடுப்பகுதியில் மட்டும் அயலவர்களுடன் பிரச்சினை, பெண்களினால் சண்டை, சேமிக்கும் சிந்தனை குறைவாக இருக்கும். பிதாவின் உடனலம் சமம், மாதாவின் உடனலம் சமம், கணவன் மனைவி உடனலம் நன்று, புத்திரர் உடனலம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றம், செய்தொழில் முன்னேற்றம் குறைவு, தொழில் ஸ்தானத்தில் சமநிலை, மாணவர் கல்விநிலை சமம், வியாபார முன்னேற்றம்.



### கர்க்கடகம்

**புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**


இவ்வாரம் உடனலக்குறைவு, கல்வ நிலை, எடுத்தகாரியம் தடை, தேவையற்ற செலவுகள், அயலவர்களுடன் மனஸ்தாபம், பணவரவு குறைவு, வந்தாலும் சேமிக்கும் சிந்தனை இராது, வாக்குவாதம் ஆகிய தீயபலன்களுடன் வார நடுப்பகுதியில் மட்டும் உளப்பூரிப்பு, உறவினர், நண்பர்கள் சங்கமம், உடல்குளிர்ந்த உணவு, தாம்பூலம் தரித்தல் ஆகிய நற்பலன்களுடன் பிதா உடனலக்குறைவு, மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி உடல்நிலை சமம், புத்திரர் உடனலக்குறைவு, திருமணப்பேச்சு தாமதமடையும், செய்தொழில் முன்னேற்றம் சமம், தொழில் ஸ்தானத்தில் சமநிலை, மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை சமம்.



### சிங்கம்

**மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்**

இந்த இராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் உடனலம், உளநலம் நன்று, சுபகாரியங்களில் பங்கு, ஆடையாபரண அலங்காரம், மகளிர் உளப்பூரிப்பு, தெய்வ தரிசனம், அறிஞர் உறவு, பிரயாணம் ஆகிய நற்பலன்களுடன் வார நடுப்பகுதியில் மட்டும் தேவையற்ற செலவு, வீண் அலைச்சல், உடனலக்குறைவு, அயலவர்களுடன் மெளனம் சாதித்தல் வேண்டும். பிதா உடனலக் குறைவு, மாதாவின் உடல்நிலை சமம், கணவன் மனைவி உடனலம் நன்று, புத்திரர் சுபக்குறைவு, திருமணப் பேச்சு தாமதமடையும். செய்தொழில் சமம், தொழில் ஸ்தானத்தில் சாதாரணமாக தொழில் புரியமுடியும், மாணவர் கல்வி சமநிலை, வியாபார முன்னேற்றம்.



### கன்னி

**உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்**

இந்த இராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் செய்தொழில் முன்னேற்றம், புதிய தொழில் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகாணுதல், பொதுசேவையில் மதிப்பு மரியாதை சுபகாரியங்களில் பங்கு, அறுசுவையுண்டி, ஆடையாபரணம் அணிவதில் மகிழ்ச்சி, தெய்வதரிசனம், அறிஞர் தரிசனம், வார இறுதியில் தேவையற்ற பயம், மனச் சஞ்சலம், வாக்குவாதங்கள் இடம்பெறலாம். பிதாவின் உடல்நிலை சமம், மாதாவின் உடல்நிலை நன்று, கணவன் மனைவி உடல்நிலை சமம், புத்திரர் சுகம், திருமணப் பேச்சு முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பலன், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை சமம்.



### துலாம்

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்**

இந்த இராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் உடனலத்தில் சிறிய தாக்கம் ஏற்படுதலும், பிதாவுடன் கருத்து வேறுபாடு உருவாதலும், வைத்தியச் செலவுகள் இடம்பெறுதலும் பின் பொதுச் சேவையில் மதிப்பு, வெளியூர்ப் பயணம், மகளிர் உளப் பூரிப்படைதலும், பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபடுதல், நண்பர்கள், உறவினர் மகிழ்ச்சி ஆகிய பலன்களுடன், பிதாவின் உடல்நிலை சமம், மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி உடனலம் நன்று, புத்திரர் மகிழ்ச்சி, திருமணப் பேச்சு முன்னேற்றமடைதல், தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சமநிலை, மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றமடையும்.



### விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை**

இந்த இராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் ஆரம்பத்தில் மட்டும் உடனலக் குறைவு, தூரப் பிரயாணங்கள் தவிர்க்கப்படல் வேண்டும், புதிய காரியங்கள் தொடங்குதல் நன்றல்ல பின் தெய்வசேவை, பிரார்த்தனை வழிபாடு, சமய அறிஞர் உறவு, வீட்டில் உறவினர் வருகை, உளக்களிப்பு, சிற்றுண்டி பரிமாறல் ஆகிய பலன்களுடன் பிதாவின் உடனலம் நன்று, மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி உடனலக் குறைவு, புத்திரர் சுகம், திருமணப் பேச்சு வேகம் குறைந்து காணப்படும். செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் செலவினங்கள் மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**



### தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்**

இந்த இராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் உடனலம் நன்று, மங்கள வைபவங்களில் பங்கு, விதம்விதமான ஆடை அணிவதில் மகிழ்ச்சி, ஆடையாபரண அலங்காரங்களில் ஆராய்வு, உடல்குளிர்ந்த உணவு, தாம்பூலம் தரித்தல், தெய்வ வழிபாடு, எதிரியின் தொல்லை, வைத்தியச்செலவு, பிதாவுடன் சிறிய தகராறு ஆகிய தீய பலன்கள் இறுதி நாட்கள் மட்டும் இடம்பெறும். பிதா உடனலக் குறைவு, மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி மகிழ்ச்சி, புத்திரர் உடனலக் குறைவு, திருமணப்பேச்சு முன்னேற்றமடைதல், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.



### மகரம்

**உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்**

இந்த இராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பழைய கடன்கள் வசூல். எதிரியின் ஆணவ வலி குன்றுதல், பணவரவு, வங்கிக்கடன், மாதர் சங்கங்களில் மங்கையர் மகிழ்ச்சியடைதல், சிற்றுண்டி பரிமாறுதல், நண்பர்கள், உறவினர் மகிழ்ச்சி, வார இறுதியில் பிரயாணத்தில் கவனம் எடுத்தல் வேண்டும். புதிய நற்காரியங்கள் தொடங்குதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். பிதாவின் உடனலம் நன்று, மாதாவின் உடனலம் சமம், கணவன் மனைவி உடனலம் நன்று, புத்திரர் உடலனக்குறைவு, திருமணப் பேச்சு முன்னேற்றம், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.



### கும்பம்

**அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்**

இந்த இராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில், பொது சேவையில் மனஸ்தாபம், நயவஞ்சகர்களினால் புகழுக்குப் பங்கம், பின் கலைநிகழ்ச்சியில் ரசனை, நண்பர்கள், உறவினர் இல்லத்தில் சமுகம் அளித்தல், வங்கிக்கடன் வசதி, எதிரி ஆச்சரியப்படல், வட்டிப் பணம் வருதல், உடல் குளிர்ந்த உணவு, மங்கையர் ஆடை அணிகலன்களால் உளம் பூரிப்படைதல் ஆகிய பலன்களுடன் பிதா உடனலம் நன்று, மாதா உடனலத்தில் அக்கறை எடுத்தல் வேண்டும், கணவன் மனைவி உடனலக் குறைவு, புத்திரர் உடனலம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றமடைதல், செய்தொழில் முன்னேற்றம் சமம், தொழில் ஸ்தா னத்தில் செலவுகள், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.



### மீனம்

**புரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி**

இந்த இராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் உடற்சுகம், மங்கள வைபவங்களில் பங்குகொள்ளல், உளப்பூரிப்புடன் உறவினருடன் உரையாடல், உடல் குளிர்ந்த உணவுடன் தாம்பூலம், ஆடை ஆபரண, அலங்கார ஆராய்வு, வார இறுதியில் சீர்திருத்த வேலைகளில் ஈடுபடும்பொழுது குறுக்கீடுகள், வீட்டில் வைத்தியச்செலவு முதலியன இடம்பெறலாம். பிதாவின் உடனலம் சமம், மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி உடனலம் நன்று, புத்திரர் உடனலம் சமம், திருமணப் பேச்சுக்கள் முன்னேற்றம் அடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபாரம் முன்னேற்றமடையும்.

# வாழ்க வளமுடன்

## நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்.



பெயர் :பா.லோஜிதன்
முகவரி: ''மாணிக்கதாரகை''
அல்வாய்.

மூன்றாவது அகவையில்.



பெயர் : ல.ஜெயக்காந்தன்
முகவரி:1 ஆம் கட்டை,
நயினாதீவு.

ஐந்தாவது அகவையில்.



பெயர் : வி.விஸ்னுகாணன்
முகவரி: 36, பாரதி லேன்,
யாழ்ப்பாணம்.

ஆறாவது அகவையில்.



பெயர் :ப.அடெம்சியா
முகவரி: அராலி தெற்கு.

ஏழாவது அகவையில்.



(நேற்றுமுன்தினம் பிறந்தநாள் கண்ட)

பெயர் :ப.றொகான தர்மினி
முகவரி: உடுவில் வீதி,
மானிப்பாய்.



பெயர் : ரி.ஷபினா
முகவரி: ஜேர்மனி.

ஒன்பதாவது அகவையில்.



பெயர் : செ.சிந்துஜா
முகவரி: சிந்துஜா வெதுப்பகம்,
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------


கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

பெற்றார் ஒப்பம்

குறிப்பு:- இம்மாத முடிவு மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்.

# கணவன் - மனைவி சண்டைக்கும் சில சட்டதிட்டங்கள்

கணவன் மனைவிக்கிடையில் சண்டையேற்படும்போது பிரயோசனமான விதத்தில் சண்டை பிடிப்பது எப்படி? விளையாட்டில் சட்டதிட்டங்களுண்டு. சண்டைக்கும் சட்டதிட்டங்களுண்டு. ஒருவர் மற்றவருடன் சண்டை பிடிக்கும் போது கூறும் செய்தி என்னவென்றால் நீ கூறுவதை என்னால் ஏற்க முடியாது என்பதே. ஒருவர் மற்றவரோடு கதைக்காமல் இருந்தால் அதன் அர்த்தம் நீ வாழ்வோர் மத்தியில் இல்லை. இறந்து விட்டாய் என்பதே. ஆகவே வார்த்தை மூலம் சண்டை பிடிப்பது பிழையில்லை. சண்டை பிடிக்கும்போது இருவரும் மனதில் கொள்ள வேண்டிய சில சட்ட திட்டங்கள் உண்டு.



☞ சண்டை பிடிப்பதாயின் அதற்கு ஒரு தலைப்புத் தேவை. உதாரணமாக மேசையிலிருந்த பாத்திரத்தில் உள்ள நீர் தட்டுப்பட்டு மேசை முழுவதும் நனைந்து விட்டது என வைத்துக் கொள்ளுங்கள். ஒழுங்காக அழகாக வைத்திருக்க ஆசையுள்ள மனைவியால் இதைப் பொறுக்க முடியாது கணவனை ஏசலாம். பாத்திரம் உடைந்த தலைப் புடனேயே சண்டை தொடங்கியது. அத் தலைப்புடன் சண்டை முடியவேண்டும். அதை விடுத்து வேறு தலைப்புகளையும் இச் சந்தர்ப்பத்தில் இழுத்துப் பேசுவது தவறு. அதாவது அன்றும் அப் படித்தான். சென்ற மாதமும் அப்படித்தான் என்று வெவ்வேறு தலைப்புகளும் சண்டையை இழுக் காது ஒரு விடயத்தில் முடித்துக் கொள்ள வேண்டும்.

☞ சிலர் பழைய கதைகளையே கிண்டிக் கிண்டிச் சண்டை பிடிப்பர். வாகனத்தில் முன்னுக்குப் பார்த்தவாறு வாகனத்தை ஓட்டும் சாரதியுடன் பயணம் செய்ய மற்றவர் விரும்புவர். ஆனால் பின்னோக்கி பார்த்தவாறு வாகனத்தை சாரதி ஓட்டினால் அந்த வாகனத்தில் பயணம் செய்ய யாரும் விரும்பமாட்டார்கள். காரணம் வாகனம் மோதிவிடும் என்பதாலேயே. அதே போன்று திருமணம் முடித்த நாளிலிருந்து நடந்தவைகளை மீண்டும் மீண்டும் அசை போடுபவர்கள் எதிர்காலத்தில் வாழ் வதில்லை. கடந்த காலத்திலேயே வாழ் கின்றார்கள். நிகழ்காலத்திலேயே சண்டை பிடிக்க வேண்டும்.

☞ பெற்றோரை, மாமா,மாமி, சகோதரரை இழுத்துப் பேச வேண்டாம். நீயும் அப்படித்தான். உன் அம்மாவும் அப்படித்தான். உங்கள் பரம்பரையே அப்படித்தான் என்று ஏசுவது பிழை. அதை விடுத்து "உங்களுக்கு இன்று எமது அம்மாவில் அதிக கோபம் வந்துவிட்டதுதானே" என்று கேட்கலாம்.

☞ சண்டையை அந்த நாளில் அந்த சந்தர்ப்பத்துடன் முடித்து விடுவது நன்று. சண்டையை முன்னோக்கி இழுத்துச் சென்று நாளுக்கு நாள் மனம் உடைவது பிழை.

☞ சில வேளைகளில் சண்டை பிடிக்கும் போது ஒருவர் மற்றவரை அவமானப்படுத்தும் விதத்தில் சண்டை பிடிப்பர். ஒருவர் மற்றவரில் கண்ட குறைபாட்டை, அல்லது சரீரத்தில் கண்ட குறைபாட்டை அல்லது செய்த செயலைக் கூறி வெட்கப்படுவார். மற்றவரில் நீங்கள் மட்டும் கண்டதை வைத்து வெட்கப்படுத்துவது தவறு.

☞ சண்டை பிடிக்கும் அறையுடன் சண்டை முடிய வேண்டும். அறையிலே சண்டைத் தொடங்கி முன்சாலையில் நீண்டு, சிலவேளைகளில் வீதியிலும் வந்து சத்தமாக ஏசுவர். இது பிழை. உலகத்தவருக்கு எமது சண்டையைக் காட்டுவது பிழை.

☞ தொழிலுக்குச் செல்லும் மனைவியர் தமது வேதனைகளைக் காரியாலயத்தில் மற்றவர்க்கு கூறுவர். இது பிழை. விசேட பயிற்சி பெற்ற ஆலோசகரிடம் அவற்றைக் கூறுவது சிறந்தது. ஒரு பெண் கணவனுடன் சண்டை பிடித்து வேதனையுடன் காரியாலயம் சென்றாள். அன்று தனது வேதனையை சக ஊழியருக்கு கூறினாள். அவர் உணவு இடைவேளையில் ரொபி ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். அவளது வேதனைக்கு ரொபி போதுமானதாக இருக்கவில்லை. அதன்பின் தனது மேலதிகாரியிடம் சொன்னாள் . அவளது வேதனை கேட்டுவிட்டு மேலதிகாரி அவளிடம் "இன்றைக்கு அரைநாள் லீவு போட்டு விட்டு படம் பார்க்கப் போவோம் வாருங்கள்" என்றார். பார்த்தீர்களா பயிற்றப்பட்ட ஆலோசகரிடம் பிரச்சினையை கூறாததால் ஏற்படும் விளைவை.

☞ பொறாமையும், சந்தேகமும், விசுவாசக் குறைவும் இளங்குடும்பங்களிலும், வயது வந்த குடும்பங்களிலும் ஏற்படலாம். அன்பு செய்யும் போது பொறாமை வரலாம். தான் அன்பு செய்ப வரை தனக்குள் மட்டும் கட்டுப்படுத்தி வைக்கப் பார்ப்பர். இது இளங்குடும்பப் பெண்களின் இயற்கையாக உள்ளது. ஒருவர் மற்றவரில் சந்தேகப்படுவது சந்தேகப்படும் விதத்தில் நடப்பதால் அல்ல, எனக்குக் கஷ்டம் வருமா? என்ற பயம் ஏற்படும்போதே. சந்தேகம் வந்தால் அன்றே வசதியான நேரத்தை ஒதுக்கி இருவரும் கலந்துரையாட வேண்டும். பெரும்பாலும் ஆணைவிடப் பெண்ணுக்குப் பாதுகாப்பு உணர்வு குறைவு. பாதுகாப்பு உணர்வு குறைந் ததும் அவர் கூடாதவர் அல்லர். மற்றவருக்கு பாதுகாப்பு உணர்வு ஏற்படும் விதத்தில் நடக்க வேண்டும்.

அதேபோன்று இருவருக்கும் மனம்திறந்த நிலை இருக்க வேண்டும். ஒருவர் மனம்திறந்த நிலை குறைந்ததும் அவரில் மற்றவருக்கு சந்தேகம் ஏற்படும். சந்தேகப்பட்டவை உண்மையில்லாது இருக்கலாம்.


☞ மாதவிடாய் நின்றதும், அல்லது கர்ப்பப் பையை சத்திரசிகிச்சை மூலம் அகற்றியதும் பெண்ணுக்கு பாதுகாப்பு உணர்வு குறையலாம். நான் இனி மேல் பிரயோசனமில்லாத ஒருவர் என்று நினைக்கலாம். சரீரமனத் தாக்கம் ஏற்படலாம். நான் முன்பு போல் கவர்ச்சியான ஒருத்தி அல்ல. உடலுறவிலும் முன்பு போல் இப்போ கவர்ச்சி இல்லை. முன்பு போல் கணவன் எனக்கு அன்பில்லை என்று கணவனைச் சந்தேகிக் கலாம்.

ஆகவே, விவாக வாழ்வைச் சமநிலைக்கு கொண்டுவர வேண்டும். கணவன் செய்யும் காரியங்களில் மனைவிக்கு உற்சாகம் ஏற்படுவதில்லை. அதைப் போன்று மனைவி செய்யும் காரியங்களில் கணவனுக்கு உற்சாகம் எடுபதில்லை. கணவன் வியாபாரியானால் வியாபார விடயங்கள் எதுவுமே மனைவிக்கு கூறுவதில்லை. இதனால் அவனுடைய மனைவிக்கு ஒன்றுமே தெரியாதிருக்கலாம். இருவரும் கலந்துரையாடுவதில்லை. இருவரும் சேர்ந்து செய்யும் வேலை வீட்டில் அல்லது வெளியில் இருக்க வேண்டும். உதாரணமாக, இருவரும் சேர்ந்து கோயிலுக்குப் போவது,



இறைவனை வீட்டில் தொழுவது, உணவு உண்பது போன்றவற்றிலாவது இருவரும் சேர்ந்து செய்வது நன்று. இன்று எமது இல்லங்களில் இருவரும் உணவைக் கோப்பையில் போட்டு தொலைக்காட்சியின் முன் சென்று அதைப் பார்த்துக் கொண்டே உணவு உண்ணுவர். இருவரும் கலந்துரையாட நேரத்தை ஒதுக்குவதில்லை.

ஆகவே இவற்றை மனதில் கொண்டு சண்டையேற்பட்டாலும் அதைப் பேசித்தீர்க்கப் பழக வேண்டும்.




## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்




சிந்தி,

உனது கடிதம் இம்முறை என்னை மிகமிக மகிழ வைத்தது. உனது முன் வீட்டில் கூடும் தோழியர் என்னை நோக்கித் தொடுத்த கேள்வி அவர்கள் நல்ல வகையில் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

"வீணே பேசிப் பொழுதைப் போக்கும் நேரத்தில் அழகியல் கலைகளில் மட்டுந்தான் ஈடுபட வேண்டுமா? ஏன் வேறு துறைகளில் ஈடுபடக்கூடாதா? " என்று அவர்கள் கேட்பதாக எழுதியிருந்தாய். அழகியலை நான் வெறுப்பதாக அவர்கள் கருதியதும், அது குறித்து எழுத வந்த வேளையில் இப்படி அழகியற் கலைகளில் அவர்கள் ஈடுபடலாமென எழுதி விட்டேன். தவறுதான். புதிய பாதை போட நினைத்துக் கொண்டிருக்கையில் பழக்கதோஷத்தால் பழைய பாதையில் கால்கள் தாமே போய் விடுவதுண்டு.

சகல துறைகளிலும் பெண்கள் ஈடுபட முன்வர வேண்டுமென்பது தான் எனது ஆசை. அவரவர்களுக்கு எந்தத் துறையில் நாட்டமிருக்கிறதோ அதில் அவர்கள் ஈடுபடலாம். மரவேலை, இரும்பு வேலை, சைக்கிள் திருத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள பெண்கள்கூட உலகில் இருக்கிறார்கள்.

நாம் அப்படி ஈடுபடாதிருப்பதற்குக் காரணம் வழமையைப் பின்பற்றி அனைவரும் போகும் பாதையிலேயே நாமும் போகும் பழக்கந்தான். அதை மாற்றி வெவ்வேறு தொழில்களை நாம் செய்ய முன்வரவேண்டும்.

இவ்வாறு செய்யும் பெண்களும் அதை வெளிப்படையாகச் செய்வதில்லை. கணவன் அல்லது தந்தை ஒரு தொழில் செய்யும் போது, அவர் ஏதோ காரணத்தால் அதைச் செய்ய முடியாத வேளையில் தாமே அதைச் செய்யும் பெண்கள், ஒன்று அதைத் தொடர்ந்து செய்து தேர்ச்சி பெறுவதில்லை. அடுத்தது அதை வெளிப்படையாகச் செய்ய தயங்குகிறார்கள். அப்படிச் செய்தாலும் அந்தத் திறமை வெளிப்படுவதில்லை.

எனக்குத் தெரிந்த ஒரு பெண் கணவன் வைத்திருக்கும் மில்லொன்றை மிகச் சிறந்த முறையில் நடத்தி வருகிறார். வீட்டிலிருந்தவாறே அருகிலுள்ள மில்லை அவர் நிர்வகிக்கும் திறனைப் பார்த்துப்பலரும் வியந்துள்ளனர். ஆனால், நிறுவனத்தின் புகழ் முழுவதும் கணவனுக்கே.

நிறுவனம் தொடர்பான ஒரு கூட்டம் நடைபெற்றால் அதில் பங்குகொள்ள அவர் தயங்குவார். ஆனால் அதில் கலந்துகொள்ளும் கணவனுக்கு வேண்டிய குறிப்புகள் ஆலோசனைகள் எல்லாம் வழங்குவது மனைவியே.

இத்தகைய தயக்கம் எம்மிடம் இயல்பாக உள்ளதல்ல. அது எமக்கு ஊட்டப்பட்டிருக்கிறது. அதனை நாம் தவிர்த்தேயாக வேண்டும்.

நமக்கு ஒரு தொழிலில் ஈடுபாடு இருக்குமானால், அதைத் திறம்படச் செய்ய தயக்கமெதுவுமின்றி அதில் ஈடுபடவேண்டும். எமது திறமை முழுவதையும் வெளிப்படுத்தி வெற்றிக்கொடி நாட்ட வேண்டும்.

"பெண் பிள்ளை செய்தால் அவ்வளவு நன்றாக இருக்காது" என அறிவுரை கூற அநேகம் பேர் வருவார்கள். நடந்த பாதையிலேயே நடக்க வேண்டுமென்று ஒரு விதியுமில்லையே. வழிகாட்டியாக மாறி பலரை நமது பாதையில் நடைபோட வைக்கலாமே.

தயங்கித் தயங்கி பிறர் தயவில் வாழ்ந்தது போதும் நல்லதை நேர்மையாகச் செய்ய எந்தத் தயக்கமும் தேவையில்லை. உன் தோழிகள் என்னென்ன தொழில்களைத் தெரிவு செய்யப்போகிறார்கள் என்பதை எழுது.

மீண்டும் சந்திப்போம்...!

அன்புள்ள
யோசி

## பெண்களுக்குக் கண்களாக...

☞ கணவனும், மனைவியும் ஒருவரையொருவர் தவறாகப் புரிந்து கொள்வதனால் தான் பல குடும்பங்களில் சண்டை சச்சரவுகள் உருவாகின்றன. குடும்ப வாழ்க்கையின் நோக்கமே பரஸ்பரம் ஒருவரையொருவர் சரியாகப் புரிந்து கொளவதுதான்.

☞ படித்த பெண்கள் உத்தியோகம் பார்ப்பதில் தவறு இல்லை. ஆனால், உத்தியோகம் பார்ப்பதனாலேயே குடும்ப நிர்வாகத்தைப் புறக்கணித்து விடுவது அறிவுடைமையும் அல்ல.

☞ மனதில் உள்ளதை ஒளிக்காமல், நேர்மையை விட்டுக் கொடுக்காமல், மற்றவர் மனம் புண்படாத வகையில் விஷயத்தைச் சொல்வது, கத்திமுனையில் வித்தை காண்பிப்பது போலாகும்.

☞ நீ எத்தனை முறை தோல்வியடைந்தாய் என்பதைப் பொறுத்துத்தான் உன்னுடைய வெற்றியின் மகத்துவம் நிர்ணயிக்கப்படும்.

# கவிதைச்சோலை



## இதயம் கொடு

இருபது வருடங்கள் இருண்டிருந்தேன் -உன்
இரு விழி வருடிட வெளிச்சம் கண்டேன்
சுடுகின்ற மழையினில் நனைந்து வந்தேன் - நான்
சுடலையில் வெந்த பின் உயிர்த்து நின்றேன்.

பூக்களில் திருக்குறள் படித்து வந்தேன் - என்
புத்தகம் வேர்விட்டுத் துளிர்க்கக் கண்டேன்
மார்கழி நிலவினில் வேர்த்து நின்றேன் - ஏன்
சித்திரை வெயிலினில் குளிருணர்ந்தேன்.

மூளைக்குள் உளி வைத்து உனை வடித்தேன் - நான்
நரம்புக்குள் காதலை ஊற்றி வைத்தேன்
இதயத்தைப் பிளந்துனை வைத்துத் தைத்தேன் - என்
விழிகளை பிரித்துனை வரைந்து வைத்தேன்

பசிக்கையில் பசி என்னும் சொல் மறந்தேன் - விழி
தவிக்கையில் தூக்கத்தை வழி மறந்தேன்
கடிக்கையில் கொசுவுக்கும் கருணை செய்தேன் - கருங்
காக்கையின் குரலுக்கும் காது தந்தேன்.

நெருஞ்சியில் சுருட்டும் உன் நினைவு - எனை
பிரமிட்டில் புதைக்கும் ஒரு கனவு
நதியாய்ப் பெருகும் நாளுமுன் நினைவு - நீ
'உம்'மென்று சொன்னதும் உலகம் எனது.

- கார்த்திகா கனகரத்தினம்.

## மரணம் வரை....

அன்பு என்பது அழகானது
யாருமதை தொலைத்திடாத வரை
நினைவு என்பது அழகானது
அதை நினைக்காத வரை
காதல் என்பது தெய்வீகமானது
யாரையும் காதலிக்காத வரை
நட்பு புனிதமானது
நமது துன்பத்தில்
நழுவும் நண்பர்களைக்
காணாத வரை
பிரிவு என்பதும் கொடுமையானது
யாரையும் பிரியாத வரை
சொந்தம்
சுகந்தமானது
எதிர்பார்ப்புக்கள்
ஏமாற்றமாகாத வரை
நிலவும் அழகானது
அமாவாசை
இல்லாத வரை
சூரியனும் அழகானது
இருட்டு வராத வரை
மேகமும் அழகானது
மழை வராத வரை
நெருப்பும்
விசுவாசமானது
வீட்டை எரிக்காத வரை
வாழ்க்கையும் கூட
நிரந்தரமானது
மரணம் வரும் வரை.



சு. சுகதினி
இணுவில்.

# அழகும் அலங்காரமும்



ஆள் பாதி, ஆடைபாதி என்பதற்கமைய உடை அலங்காரத்திலும், பெண்கள் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். ஆடைகளை தேர்ந்தெடுக்கும் முன்பு உருவத்தை மனதிற் கொள்வது மிகமிக அவசியம். சரியான முறையில் தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ளும் உடைகள் தோற்றத்திற்கு புதிய பொழிவைக் கொடுக்கும். பெரிய, பெரிய பூக்கள், டிசைன்கள் உள்ள உடைகள் பருமனான பெண்களுக்கு பொருந தாது. காரணம் அவைகள் அவர்களை மேலும் பிரமாண்டமாகத் தோன்றச் செய்யும். குத்தான கோடுகள், வேலைப்பாடுகள் கொண்ட உடைகள் உயர மானவர்கள் அணியக்கூடாது. அவைகள் மேலும் உயரமாகக் காட்டும். குட்டையாக இருக்கும் பெண்கள் சிறிய டிசைன்கள் கொண்ட அல்லது டிசைனே இல்லாத வெறும் கலர் ஆடைகளை அணிவது அழகிய தோற்றத்தைக் கொடுக்கும். கிடையான கோடுகளைக் கொண்ட பெரிய பெரிய டிசைன் களைக் கொண்ட ஆடைகளை அணிவது நல்லது. புடைவையை எடுத் துக் கொணடால் குட்டையான பெண்கள் பெரிய போடர்களைக் கொண்ட புடைவைகளை தேர்ந் தெடுக்கக்கூடாது. அது உயரமான பெண்களுக்கே மேலும் அழகைக் கொடுக்கும். விலை குறைந்த உடைகள் ஆயினும் விலையுயர்ந்த உடைகளாயினும் உங்க ளுக்குப் பொருத்தமாக அணிந்து கொள்ளுங்கள். பருத்தியாடையாக இருக்கும் பட்சத்தில் கஞ்சி போட்டு சலவை செய்து அணிந்து கொள்ளுங்கள். புடைவைக் கேற்ப பிளவுசை அளவாக தைத்து அணியுங்கள் உடைகளைத்தைக்கும்போது அப்போதைய நாகரிக டிசைன்களில் சரியாக பொருந்தும்படி தைத்து அணிந்து கொள்ளுங் கள். இப்படியாக எல்லா விடயங்களிலும் பெண்கள கவனத்துடன் செய ற்படுவதுடன் தங்கள் பழக்க வழக்கங்களை யும் சிறந்த முறையில் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு பெண் அதிஅற்புதமாக இருந்தாலும், பேசுவதில் திறமையற்றவளாக இருக்கலாம். சில பெண்கள் சாதாரண அழகாகவும், எளிமையாகவும் இருந்தாலும் பேசும்போது மற்றவர்களை கவர்ந்துவிடுவர். அந்த அழகிய குரலை மீண்டும் கேட்கமாட்டோமா என்று ஏங்கவைக்கின்ற அளவிலும் பேசுவார்கள். பேசும் கலை எல்லோருக்கும் வருவதில்லை. இருந்தாலும் அலங்காரம் செய்ய விரும்புவதுபோல் அதையும் கற்றுக் கொள்ள விரும்ப வேண்டும். நம்குரலின் தன்மையை நன்கு புரிந்து கொண்டு அதிகம் கத்தாமல் இயல்பாக பேசவேண்டும். குறைவாகப் பேசினாலும் சுவாரசியமாகப் பேசவேண்டும். எப்போதும் முகத்தை இனிமையாகவும், லேசான புன்முறுவலுடனும் வைத்துக் கொள்ள வேண்டும். மகிழ்ச்சியான சூழ்நிலையில் பெண்கள் அளவோடு சிரிப்பதில் தவறில்லை. ஆனால் அநாவசியமாக அதிகமாகப் பெண்கள் சிரிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். Artificial walking என்று சொல்லப்படும் செயற்கை நடை நடக்கக்கூடாது. நன்றாக நிமிர்ந்து சாதாரணமாகவே நடக்க வேண்டும்.

*தொடரும்.*

யோகி சண்முகநாதன்

# புதுமையில் வளரும் மகளிரின் மாண்பு

**சிறையிருத்தி ஆணையிட்ட பழந்தமிழர் மறைந்திட்டார்**
**கறைபடிந்த வரலாற்றுக் காகிதத்தை எரித்திட்டார்**
**முறையறிந்து கலைவளர்த்து உடலுறுதி பெற்றிட்டார்**
**திறமைகளினாலேயரும் பணிகளிலே திளைத்திட்டார்**

**ஆளுமையி லுயர்ந்த நிலை யருங்கலைகள் பயிற்றுமுறை**
**நாளுமறிந் ததன்பயனாய் நற்றவதற்தாற் சேர்த்துவிட்ட**
**வாழுகின்ற நெறிமுறைகள் வழங்குமொரு குலத்தினராய்**
**ஏழுலகும் போற்றுகின்ற பெரும் பணியி லுயர்ந்து நின்றார்**

**மெய்யியலில் நாட்டமுற்று மேனியுரு வனப்புவைத்து**
**தையலர்க ளென்றிடவே தயங்குகின்ற கோலத்தோடு**
**வெய்யதுயர் சுமந்து கொண்டு வேதனைகள் நீக்குகின்ற**
**தெய்வமெனக் காட்சிதரும் மகளிர்பண்பால் மண்ணுயரும்**

**பழமைபேணும் புத்தியினி பயனளிக்கா தென்றுணர்ந்து**
**களனியிடை களையகற்றி பயிர்செழிக்க வளர்ப்பதுபோல்**
**இளமையுற வளர்ந்துவரும் கயல்விழியி னாவையர்தம்**
**பழியுரைக்கு மஞ்சாநின்று பல்தொழிலும் பயிலுகின்றார்**

**மருத்துவத்தில் தேர்ச்சி பெற்று விருத்தியுற வளர்ந்தபின்பு**
**தனித்திருந்து பொறுமையோடு வருந்துகின்ற மக்கள் பிணி**
**புரிந்ததனை நீக்குதற்கு பரிந்துரைத்துப் புரியும் சேவை**
**அரும்பணியு ளொன்றெனவே அகங்களிக்கும் மகளிருள்ளம்**

**திருமணத்தி லொருகருத்து நிலைத்துவிடா நிலையொடுக்கி**
**பொருதுகின்ற களம்நினைந்து உருகுகின்ற உந்துதலால்**
**கருவியெடுத் தாளுகின்ற பயிற்சியினைப் பெறுவதற்கு**
**செருக்களத்தை நாடி நிற்கும் ஆண்மையினிற் நினைக்குமுள்ளம்**

மாரீசன்

# அச்சாறு

சுவைத்துச் சாப்பிட சுவையோ சுவை!




**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| பச்சை மிளகாய் | - | 1/4Kg |
| வெங்காயம் | - | 1/4Kg |
| பப்பாசிக்காய் | - | 125g |
| கரட் | - | 125g |
| வினாகிரி | - | 2 டம்ளர் |
| செத்தல்மிளகாய் | - | 5 |
| கடுகு | - | 1 மேசைக்கரண்டி |
| உள்ளி | - | 4 பல்லு |
| இஞ்சி | - | 2 அங்குல நீளத்துண்டு |
| உப்புத்தூள் | - | 1 மேசைக்கரண்டி |

**செய்முறை:**

ஈரமற்ற உலர்ந்த அம்மியில் செத்தல்மிளகாய், கடுகு என்பவற்றை வைத்து வினாகிரி சேர்த்து அரைத்துக் கொண்டபின் உப்பு, உள்ளி, இஞ்சி என்பவற்றைச் சேர்த்து விழுது போல் அரைத்து எடுத்துக் கொள்ளவும். வெங்காயத்தைத் தோல் உரித்துத் துப்பரவாக வைத்துக் கொள்ளவும். கரட்டினைச் சுரண்டிக் கழுவி சிறுசிறு துண்டுகளாக வெட்டிக்கொள்க. பப்பாக்காயையும் தோல் சீவிக் கழுவி சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கொள்க. பச்சை மிளகாய்க்காம்பை நீக்கிவிட்டுக் கழுவி அதன் நுனிப்பகுதியை வெட்டிவிடவும். 1/2 டம்ளர் வினாகிரியை மண்சட்டியில் கொதிக்க வைத்து பச்சை மிளகாயைப் போட்டு அவித்து வினாகிரி வற்றியதும் எடுத்துக் கொள்க. அடுத்ததாக 1/2 டம்ளர் வினாகிரியை அதே சட்டியில் ஊற்றி வெங்காயத்தைப் போட்டு அவித்தெடுத்துக் கொள்க. இதே போல பப்பாக்காய் கரட்டையும் 1/2 டம்ளர் வினாகிரியை சட்டியினுள் இட்டு அதனுள் அரைத்த கூட்டைப் போட்டு கொதித்த பின் எல்லா மரக்கறிகளையும் சேர்த்து இறக்கி ஆறவைத்து கண்ணாடிச் சாடியினுள் அடைத்து வைத்து நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தலாம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை

- திருக்குறள்.

## நமது நோக்கு

### நம்பிக்கை காப்பாற்றப்படட்டும்!

தாய்லாந்துப் பேச்சுக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு உப குழுக்களின் கூட்டங்கள், ஒவ்வொரு பிராந்திய ரீதியாகவும் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கூட்டங்களில் யாழ்ப்பாணம், வவுனியா பிராந்தியங்களுக்கான கூட்டங்கள் இரண்டு தரப்பினரையும் பொறுத்தளவில் திருப்தி தராததாக அமைந்திருந்தன. ஆனால், மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியக் கூட்டம் பற்றி இரண்டு தரப்பினரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதோடு, சில முடிவுகளும் எட்டப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களில் அடிக்கடி முரண்பாடுகளும், பிரச்சினைகளும் தோன்றி வந்த கிழக்கு மாகாணத்தில் - இத்தகையதொரு ஆரம்பகட்ட இணக்க நிலை, இருதரப்பினரிடமும் நிலவியிருப்பது, நல்லதொரு தொடக்கமாகவே கருதப்பட வேண்டும்.

குறிப்பாக - விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட - மட்டக்களப்புக் கோட்டையிலுள்ள அரச செயலகப் பகுதியிலிருந்தும், மட்டு.மாநகரசபை நூலகத்திலிருந்தும் இராணுவத்தினர் உடனடியாக விலக வேண்டுமென்ற கோரிக்கைகளுக்குப் படைத்தரப்பு சாதகமான பதிலைத் தந்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

மூவின மக்களும் வாழ்ந்துவரும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களைப் பொறுத்தளவில் நல்லிணக்கச் சூழலைத் தோற்றுவிப்பதான இத்தகைய முடிவுகள் எட்டப்படுவது - அப்பகுதியின் அமைதிச் சூழலை காப்பதற்கும் , மக்களது இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் உதவியானதாக அமையும்.

சந்திப்பின் முடிவில் - கருத்துத் தெரிவித்த படைத்தரப்பு தலைமையாளரான மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட - பேச்சு ஆக்கபூர்வமானதாகவும், நட்புறவானதாகவும் அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து இந்த ஆக்கபூர்வமான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டிருக்கும் இராணுவத்தரப்பு - தொடர்ந்தும் இந்த ஆரோக்கியமான உறவைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமென்பதே முக்கியமானதாகும்.

தமிழர் தாயகத்தின் ஏனைய பகுதிகளைப் போலல்லாமல், மட்டக்களப்பு - அம்பாறை பிரதேசம் எளிதில் சிக்கல்களும் முரண்பாடுகளும் உருவாகக் கூடிய, உணர்வு மையமாக (Sensitive Area) திகழ்வதால் - இப்பகுதிக்கான பாதுகாப்பு விடயங்கள் மிக அவதானமாகவே கையாளப்படவேண்டிய தேவையுள்ளது.

அதேவேளை - விசேட அதிரடிப்படை உட்பட, கடந்த கால வரலாறுகளில் பல குழப்பங்களுக்கும் பொறுப்பாகவிருந்த படையணிகளும், குழுக்களும்- மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளில் இயங்கி வருகின்றன.

இத்துடன் முஸ்லிம்கள் தரப்பிலும் ஜிஹாத் மற்றும் ஜிஹாத்திலிருந்து பிரிந்து உருவாக்கப்பட்ட இரகசிய ஆயுதக் குழுக்கள், அரசியல்வாதிகளின் ஆதரவுடனும், ஆசியுடனும் இயங்கி வருகின்றன.

இவ்வாறான சூழலில் - கிழக்கில் படைத்தரப்பும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வின்பால் செயற்படுவதானது அவசியமானதாகின்றது.

இத்தகைய முக்கியமான நிலையில் நடந்துவந்த பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்கள், சரிவர நடைமுறைக்குட்படுத்தப்படுவதோடு, நேற்றுமுன்தினம் காட்டிய அக்கறையை, தொடர்ந்தும் பேணிவருமென்ற நம்பிக்கையைக் கட்டிக்காக்க வேண்டிய பெரும் பொறுப்பு படைத்தரப்புக்கு உண்டு.

அவ்வாறான பொறுப்புணர்வே - கிழக்கின் நீடித்த அமைதிக்கும், சுமூக நிலைக்கும் உறுதியான அடித்தளத்தைத் தருவதாக அமையும்.

### வட-கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த

## 30 ஆயிரம் சிங்களவரை குடியமர்த்த அஸ்கிரிய மகாநாயக்கர் கோரிக்கை!

(கொழும்பு)

வட - கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த 30 ஆயிரம் சிங்களவர்களையும் உடனடியாக மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அஸ்கிரிய மகாநாயக்கர் வண.உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர், அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனாவைக் கேட்டுள்ளார்.

வட - கிழக்குப் பகுதிகளில் உள்ள பேக்கரிகள், கராஜ்களில் பணியாற்றி, அங்கிருந்து இடம்பெயர்ந்த 30 ஆயிரம் சிங்களவர்களையும் உடனடியாக மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொலநறுவை எல்லையிலுள்ள சோமாவதி சைத்திய மற்றும் திருகோணமலை - திரியாய் ஆகிய பகுதிகளில் மீண்டும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட வேண்டும்.

அத்துடன் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அஸ்கிரிய மகாநாயக்கர் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரட்ணாவைச் சந்தித்த பின்னர், அஸ்கிரிய மகாநாயக்கரைச் சந்தித்தபோதே அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனாவிடம் இக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன, வடக்கில் 260 விகாரைகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும், இவற்றில் அனேகமானவற்றில் பௌத்தகுருமார் இல்லாமைதான் முக்கிய பிரச்சினையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

### 20 பொலிஸ் அதிகாரிகள் லஞ்ச ஊழல் விசாரணையில்

(கொழும்பு நிருபர்)

இருபது உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக லஞ்ச, ஊழல் விசாரணைகளை நடத்தவுள்ளதாக லஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர், மூன்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், நான்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 20 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகவே இவ்விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

சாதாரண பொலிஸ் அதிகாரிகளாக இருந்த இவர்களிடம் தற்போது பெறுமதி குறிப்பிப்படாத பெருமளவு சொத்துக்கள் இருப்பதாகப் பொதுமக்கள், லஞ்ச ஊழல் திணைக்களத்திடம் புகார் செய்துள்ளனர்.



## அரசியல், நிதி இலக்குகள் ஒஸ்லோவில் எதிர்பார்ப்பு!

### நோர்வே விசேட பிரதிநிதி சொல்ஹெய்ம்

(கொழும்பு)

எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியிலும் பார்க்க துரிதமான பாதையில் பேச்சுகள் நடைபெற்றுவருவதாக நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு இரண்டு இலக்குகள் இருப்பதாகவும் - அவர் குறிப்பிட்டார். முதலாவது அரசியல் ஆதரவைத் தேடிக்கொள்வது. அடுத்ததாக நிதியுதவிகளைப் பெறுவதாகும்.

நிதி வழங்கும் நாடுகள், இருதரப்பினரும் நிதியை எவ்வாறு கையாளப் போகின்றார்கள் என்பது குறித்த விரிவான திட்ட மதிப்பீடுகளை எதிர்பார்ப்பதாகவும் - சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட மிலிந்த - மன்னார் ஆயர் களுத்துறைக்கு!

### விடுதலை தொடர்பாக ஒன்றரை மணிநேரம் பேச்சு

(கொழும்பு நிருபர்)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுடன் அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழு நேற்று பேச்சுக்கள் நடத்தியுள்ளது.

நேற்றுக்காலை களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்ற அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவில் மன்னார் ஆயர் மேதகு.இராயப்பு ஜோசப் ஆண்டகை, சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த பேணாட் குணதிலக, மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

தற்போது களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 111 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவே இச்சந்திப்பில் ஆராயப்பட்டது. சுமார் ஒன்றரை மணிநேரமாக இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல் கைதிகளுக்கு எதிராக விரைவில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, குற்றமற்ற அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான நடைமுறைகள் குறித்து ஆராயப்பட்டது.

களுத்துறைச்சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மாதம் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தபோது - அங்கு சென்று பார்வையிட்டு, உண்ணாவிரதிகளுக்கு மீண்டும் ஒரு மாதத்தில் சிறைச்சாலைக்கு வருகை தருவதாக அமைச்சர் மிலிந்த உறுதியளித்ததன் பேரிலேயே அவரது இவ்விஜயம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

## அரியாலையில் ஆயுதப் பயிற்சி பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர் விடுவிப்பு!

(கொழும்பு நிருபர்)

புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர்களாகக் குற்றஞ்சாடடப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ரகுநாதன் சர்மா என்ற இளைஞரே விடுவிக்கப்பட்டவராவார். 1990 ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் வரை அரியாலையிலுள்ள பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றதாக - இவர் வழங்கிய ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே சட்டமா அதிபரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்டமா அதிபர் வழக்கைக் கைவிடுவதாக மேல்நீதிமன்றத்திற்கு அறிவித்ததையடுத்து நேற்றுமுன்தினம் மாலை இவரை விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

### மீனவர்களுக்கு கடனடிப்படையில் வெளியிணைப்பு இயந்திரங்கள்

(கொழும்புத்துறை)

வடமாகாண கடற்தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஊடாக செலான் வங்கிமூலம் யாழ்ப்பாண கடற்றொழிளார்களுக்கு கடன் வழங்கப்பட இருக்கும் வெளியிணைப்பு இயந்திரங்கள் அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

8 குதிரை வலுக்கொண்ட 25 இயந்திரங்களும் வரும் 25 ஆம் திகதி சமாசப்பணிமனையில் வைத்து பயனாளிகளுக்கு வழங்கப்பட இருப்பதாக சமாசத்தலைவர் சி.தவரெட்ணம் தெரிவித்தார்.

(60)

### பல்கலைக்கழக வன்முறைகளை தடுக்க விசேட பொலிஸ் குழு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பணியில் ஈடுபடுத்த விசேட பொலிஸ் குழுக்களை அமைக்கவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பேலியகொடவில் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் - ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட மோதல் சம்பவங்களையடுத்தே அரசாங்கம் இந்த முடிவினை எடுத்திருக்கின்றது. இப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேல் நிகழக்கூடாதென்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களின் மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே விசாரணைக்குழுவொன்றை அமைத்துள்ளார் எனவும் உள்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தீமைகளைக் கண்டும் காணாமல் இருப்பதும் சமூகத் துரோகமாகும்!

**நமது சமுதாயத்தை ஒட்டு மொத்தமாகப் பாதிக்கும் விஷயங்கள் எவை? என்ற கேள்விக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபரும் பிரபல எழுத்தாளரும் "கலைச்செல்வி" ஆசிரியருமான சி.சிவசரவணபவன் (சிற்பி) விருந்தினர் பக்கமூடாக விடை பகருகிறார்.**

"உயர்ந்த - சிறந்த - உன்னதமான ஒரு பண்பாட்டின் உரிமையாளர்கள் நாம்" என்று சொல்வதில தமிழர்களாகிய நமக்கெல்லாம் ஒரு தனிப்பெருமை. நமது பண்பாட்டின் தொன்மையும் மேன்மையும் மீண்டும் மீண்டும் பேசப்படுவதும், அத்தகைய பேச்சுக்களுக்குச் சபையோரின் உற்சாகமான வரவேற்புக் கிடைப்பதும், தமிழ் இலக்கிய - சமய - அரசியல் மாநாடுகளில் நாம் காண்கின்ற, கேட்கின்ற விஷயங்கள்.

ஆனால் சமீபகாலமாக, நமது பிரதேசத்தில், மிக அதிக அளவில் நடைபெற்று வரும் சில நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது "நாங்களும் தமிழர்களா? நமது முன்னோர்கள் தம் கண்ணைப் போற்கட்டிக்காத்த தமிழ்ப் பண்பாட்டின் வாரிசுகள் நாம் என்று சொல்லிக் கொளளலாமா?" என்ற கேள்விகள் - சந்தேகங்கள் - எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

கொலை, களவு, கள், காமம், குருசந்தை ஆகியவற்றைப் பஞ்சமாபாதகங்கள் என வகைப்படுத்தி, சமுதாயத்திலிருந்து அவை முற்றாகவே ஒழிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்துகின்றது தமிழ்ப்பண்பாடு. இவற்றின் பயங்கரத்தன்மைகளையும், விளைவுகளையும் தமிழ் இலக்கியங்கள் பல, விரிவாகவும் தெளிவாகவும் விளக்குகின்றன.

ஆனால், இவை ஒழிக்கப்படுவதற்குப் பதிலாக, "வளர்க்கப்"படுவதையே நாம் இப்போது கண்டு வருகின்றோம்.

ஏனைய நான்கு பாதகங்களையும் செய்வதற்குத் தூண்டிக்கொண்டும், அவற்றைத் தொடர்வதற்குத் துணிவை வழங்கிக் கொண்டும் இருப்பதனாலேயே "கள்" பஞ்சமா பாதகஙகளுள் மத்திய இடத்தில் வைக்கபட்டிருப்பதாக அறிஞர்கள் விளக்கமளிக்கின்றனர்.

கள், அதன் இனங்களாகிய சாராயம், கசிப்பு, வெவ்வேறு கவர்ச்சிப் பெயர்களைக் கொண்ட மேனாட்டுக் குடிவகைகள், பல்வேறு வகையான போதைப் பொருட்கள் போன்றவற்றின் பாவனைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அறிந்து கொள்வதற்குப் புள்ளிவிபர அறிக்கைகளைக் காத்துக்கொண்டிருக்கத் தேவையில்லை; விழிப்புணர்ச்சியுடன் இருக்கும் எல்லோருக்கும் இது தெரியாமல் போவதில்லை. முதியவர்களைப் பார்த்துப் புதியவர்களும்- மாணவர்கள், இளைஞர்கள் முதலியோரும்- இவறறுக்கு அடிமையாகி வருவதைக் கண்டு வருந்தாமலிருக்க முடியாது.

குடிப்பதும் அதைப்பற்றி வெளிப்படையாகக் கதைப்பதும், பல்வேறு குடிவகைகளின் தரம் பற்றிப் பகிரங்கமாக விவாதிப்பதும், வெட்கத்திற்குரியவை என்ற நிலைமாறி, அவற்றை நாகரிகத்தின் அம்சமாகக் கருதும் போக்கு வளர்ந்து வருகின்றது. மதுபானம் பரிமாற்றப்படாத விருந்து, பலருக்கு ருசிப்பதில்லை!




குடும்பப் பிணக்கு, பொருளாதார நலிவு, வீதிவிபத்துக்கள், பல்வேறு வகையான சமுதாயச் சீர்கேடுகள் - எல்லாமே "குடி"யின் வழிததோனறல்கள்!

பாலியல் வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம், இவற்றோடொட்டிய படுகொலைகள் போன்றவை, "புதினம்" என்ற வகையை மீறி, "சாதாரண நடைமுறை"யாகப் பரிணாமம் கொள்ள விரைகின்றன. நாளேடுகளில் இவை சம்பந்தமான விபரமான தகவல்களை நிச்சயமாகக் காணலாம். ஆகக் குறைந்தது ஒரேயொரு தகவலாவது இடம்பெறாவிட்டால், அந்த 'இடம்பெறாமை'யே அன்றைய தினத்தின் முக்கிய புதினம் ஆகிவிடுகின்றது!

குழுக்களாக இயங்கும் இளைஞர்களின் அட்டகாசத்தை வர்ணிக்க வார்த்தைகளில்லை. தனியாக இருக்கும் போது நல்லவர்களாக - சாதுகளாக இருப்பவர்கள் கூட, குழுவாகச் சேரும் போது நிலைமை தடுமாறுகின்றனர்.

களவுகளும் மலிந்துவிட்டன. அங்கிங்கெனாதபடி எங்கும் - வீடுகள், வீதிகள், கல்லூரிகள், கோவிலகள், பேருந்துகள், புகைவண்டிகள் போன்றவற்றிலும் - இரவு, பகல், காலை, மாலை என்ற வேறுபாடின்றி எல்லா வேளைகளிலும் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோரின் வாக்குமூலங்கள் பல, நமது பண்பாட்டின் மேன்மையைக் கேள்விக் குறியாக்கும் விதத்தில் அமைந்துள்ளன.

இல்லாமை காரணமாகத் திருடுபவர்களை விட, இருப்பதை மேலும பெருக்குவதற்காகத் திருடுபவர்களின் தொகை அதிகம்-

திருடர்கள், தாம் தப்புவதற்காகக் கொலை செய்வதும் உண்டு-

மற்றவர்களின் உடைமைகளை பலாத்காரமாகவோ, ஏதாவது தந்திரங்களையும் பிரயோகித்தோ அபகரிப்பது மட்டும்தான் திருட்டு என்பதில்லை.

வாங்கிய கடனைத் திட்டமிட்டுத் திருப்பிக்கொடாமலிருப்பதும், 'கள்ளக்கணக்கு' மூலம் பொதுப் பணததைக் கையாடுவதும்கூடத் திருட்டுத்தான்.

இந்த "நாகரிகத் திருட்"டில், உயர் பதவிகளில் இருப்பவர்கள் கூடக் கூசாமல் ஈடுபடுகின்றனர். கையும் மெய்யுமாகப் பிடிபட்டாலோ, சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவர்களைக் காட்டிக் கொடுத்தாலோ, தம் 'கடமையுணர்ச்சியையும் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும்' நிரூபிப்பதற்கும் அதே பதவியையே ஒரு கருவியாகப் பயன்படுத்துவதறகும் அவர்கள் தயங்குவதில்லை.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற பொன்மொழி, ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் ஆறாந் திகதி ஆசிரியர் தினத்தன்று மேடையில் முழங்கப்படுவதற்காகப் பத்திரமாகச் சேமிக்கப்படும் ஒரு பொன்மொழியாகவே இருக்கின்றது.

ஆசிரியர்களையும் அதிபர்களையும் மிரட்டுவதும், ஏசுவதும், அவர்களுக்கு எதிராக மாணவர்களைத் தூண்டி விடுவதும் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன. தமக்குப் பிடிக்காத ஆசிரியர்களை- தமது கட்சிக்கு எதிரான ஆசிரியர்களை-அவர்கள் எவ்வளவு தான் திறமைசாலிகளாக இருந்தாலும்- 'தண்ணியில்லாக் காட்டுக்கு' அனுபபித் தவிக்க வைப்பதில் சில அரசியலவாதிகளுக்குத் தனி விருப்பம்!

சமுதாயத்தின் பல்வேறு மட்டங்களில் இருப்பவர்கள் எல்லாம் இத்தகைய வேண்டத்தகாத- வெறுக்கத்தக்க-தீய செயல்களில் ஈடுபடுவதற்குரிய காரணங்கள் யாவை?


இப்போதைய கல்வி முறையே காரணம் என்கின்றனர் சிலர். தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதொன்றே இப்போதைய கல்வியின் குறிக்கோள். தர்மம், நீதி, நேர்மை, அன்பு போன்ற நற்பண்பின் அம்சங்கள் வலியுறுத்தப்படவேண்டிய இளமைப் பருவத்தில், தொழில் வாய்ப்பு, பணம் போன்றவற்றின் முக்கியத்துவம் அளவிற்கு மீறி வலியுறுத்தப்படுவதையே காண்கிறோம். எந்த வழிகளைக் கையாண்டும் பரீட்சைகளிற் சித்தியடையலாம். எவ்வளவு தொகையைக் கையூட்டாகக் கொடுததும் நல்ல உத்தியோகத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற மனப்பாங்கு மாணவர்களிடம் உருவாகின்றது; உருவாக்கப்படுகின்றது.

ஆலயங்கள் தமது கடமைகளினின்றும் பிறழ்ந்துள்ளதைக் காரணமாகக் கொள்வர் சிலர். பக்தியையும், பண்பாட்டையும் வளர்க்க வேணடிய ஆலயங்கள், பகட்டிற்கும் கேளிக்கைகளுக்கும் நிலைக்களனாக இருப்பதை இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சமயத் தலைவர்கள், சமயவாதிகள், குருமார்கள் கூட சமய வாழ்க்கை வாழ்வதில்லை எனபதும் ஒரு காரணமாகக் காட்டபபடுகின்றது.

பணத்தின் கோரத் தாண்டவம், சமுதாயத்தையும் விட்டுவைக்கவில்லை. ஏழைகள் பலரின் வாழ்க்கைத் தரத்தை வெளிநாட்டுப் பணம் உயர்த்தியுள்ளது என்பது உண்மைதான், வசதியான வாழ்க்கை வாழ்வதற்கு அந்தப் பணம் வழி வகுப்பதும் உண்மைதான். அதேவேளை எண்ணற்றத் தீமைகளுக்கும் அந்தப் பணமே காரணமாக இருந்து வருகிறது. தொலைக்காட்சி பெட்டி இல்லாத வீடுகளே இப்போது இலலை எனலாம். தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் திரைப்படங்கள், குறுந்திரைப் படங்கள், விளம்பரங்கள் எல்லாமே கவர்ச்சியையும் பணப் பெருக்கத்தையுமே மையமாகக் கொண்டவை. மாணவர்களும் இளைஞர்களும் இந்தக் கவர்ச்சிக்கு மிக இலகுவில் அடிமையாகிவிடுகின்றனர். தொலைக்காட்சி பார்ப்பது 'வெறும் பொழுதுபோக்கு' எனறில்லாமல், 'முழுநேரத் தொழில்' என்றாகிவிட்டது. இளைஞர்களிடையே ஒழுக்கப் பிறழ்வையும் வன்முறை நாட்டத்தையும் உருவாக்கி வளர்ப்பதில் தொலைக்காட்சிக்கு முக்கியமான இடம் உண்டு. சுருக்கமாகச் சொன்னால் தொலைக்காட்சி என்பது வீட்டிற்குள் வந்திருக்கும் வில்லன்!

படிப்பறிவற்ற பாமர மக்களுக்கு ஆசானாக இருந்து அறிவூட்டி வழி காட்ட வேண்டிய தொலைக் காட்சியும் வானொலியும், சினிமாவின் ஆளுகைக்குட்பட்டு, பாலுணர்வையும வன்முறைக் கலாசாரத்தையும் தூண்டி வருகின்றன என்பதை மறுபபது கடினம்.

சினிமாக் கவர்ச்சியை வைத்துப பணம் பண்ணுவதில் நமது நாட்டுப் பத்திரிகைகள் சஞ்சிகைகளும் போட்டி போடுகின்றன என்ற உண்மையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆபாசத்தையும் சினிமாக கவர்ச்சியையும் முக்கியமாகக் கருதி வெளியிடப்பட்டு வரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் படுவது தடுக்கப்படல் வேண்டும் என்பதற்காகப் போராட்டம் நடத்தி அதில் ஓரளவு வெற்றியும் கண்டவர்கள் இந்நாட்டு எழுத்தாளர்கள்.



சி.சிவசரவணபவன் (சிற்பி)

ஆனால் "திறந்த பொருளாதாரக் கொள்கை" காரணமாக அந்தத் தடை, தகர்க்கப்பட்டுவிட்டது. அது மட்டுமல்லாமல், இலங்கைப் பத்திரிகைகளே சினிமாக் கவர்ச்சியைக் காட்டி வாசகர்களை மயக்கும் கைங்கரியத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றன. வயது வந்த பிள்ளைகள் இருக்கின்றமை காரணமாக, வாராந்தப் பத்திரிகைகளை வீட்டிற்கு எடுத்துச்செல்லத் தயங்குகின்ற பெற்றோர்கள் பலருளர்.

பண்பாட்டு சீரழிவிற்கு மேற்சொன்னவற்றுடன் மேலும் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றையெல்லாம் ஆழமாக ஆராய்ந்து, வேரோடு களைந்து நமது மக்களை நமது இளைஞர்களை அழிவிலிருந்து காப்பற்ற வேண்டியது சான்றோர்கள்-அறிஞர்கள்-கல்விமான்கள்-சமூகத் தலைவர்கள் போன்றோரின் தவிர்க்க முடியாத கடமை.

இந்தத் தீமைகளைக் கண்டும் காணாதவர்களைப் போல இருப்பது சமூகத் துரோகமாகும், பண்பாட்டுத் துரோகமுமாகும்.

"தீயவர்களின் கொடுமைகள், அக்கிரமங்களைவிட, அவற்றைக் கண்டும் காணாதவர்களைப் போல் நல்லவர்கள் சாதிக்கும் மௌனமே மகா பயங்கரமானது" என மார்ட்டின் லூதர் கிங் சொன்னதை நினைவூட்டுவது பொருத்தமென நினைக்கின்றேன்.

---

## நயினை வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி இல்லை

நயினாதீவு அரசினர் மருத்துவமனையில் நீண்ட காலமாக நிரந்தர மருத்துவ அதிகாரி இன்மையால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இது பற்றி மேலிடத்தின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வந்தும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. நிரந்தர மருத்துவ அதிகாரி இலலாமையால் மருத்துவப் பணிகளை முழுமையாக செய்ய முடியாதுள்ளதாக நயினாதீவு அரசினர் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (10)

## துறைமுகங்கள் மத்திய அரசிடமே

வடக்கு - கிழக்கு பகுதி நிர்வாகம் புலிகளிடம் வழங்கப்பட்டாலும் திருமலை, ஒலுவில் துறைமுகங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (01)

## நெல்லியடி நகரில்
## வர்த்தகர்களின் எதிர்ப்பால் காவலரண் அமைப்பது தடுப்பு

(வடமராட்சி)

நெல்லியடி நகரப்பகுதியில் புதிதாக காவலரண் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த படையினரை அங்குள்ள வர்த்தகர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கி அருகில் காவலரண்களை அமைக்கப் படையினர் முயன்றனர். இதற்காக பனங்குற்றிகள், மண் மூடைகள் அங்கு கொண்டுவரப்பட்டு 10 படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதற்கு நெல்லியடி நகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பொது அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையை யடுத்து படையினர் தமது காவலரண் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டனர்.

## சாவகச்சேரி நகர சபை தொழிலாளர்கள்
## தமது வீடுகளிலிருந்து படையினரை வெளியேற்றுமாறு வேலைநிறுத்த முஸ்தீபு

(சரசாலை)

சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் - தமது குடியிருப்புகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரி - வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கவுள்ளனர்.

படையினர் கடந்த 2 வருடமாகத் தமது குடியிருப்புக்களில் நிலை கொண்டுள்ளதால், அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாத நிலையில் வசிப்பதாகவும் தெரிவித்தனர்.

இவ் வேலைநிறுத்தம் தொடர்பாக நகர சபைக்கு - சுகாதாரத் தொழிலாளர்கள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர். (34)

## கன்னியர்மடத்தில் 'நெஞ்சுறுத்தும் கானல்' ஆற்றுகை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், செயறதிறன் அரங்க இயக்கத்தினூடாக வழங்கும் "நெஞ்சுறுத்தும் கானல்" நாடக ஆற்றுகை 25 ஆம் திகதி - யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.


யாழ்.மாவட்டத்தில் போரின் பின் மிகப்பெரும் அச்சுறுத்தாக உள்ள மிதிவெடிகள், மற்றும் வெடிபொருட்களின் அபாயத்தில் இருந்து மக்களைப பாதுகாக்கும் நோக்குடனேயே இவை நடாத்தப்பட்டு வருகின்றன.

## அன்பளிப்பு

(சுன்னாகம்)

மயிலணி ஜனசக்தி மழலைகள் கல்விப் பூங்காவில் கல்வி பயிலும் சிறார்களின் பாவனைக்கென ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கதிரைகளை சுவிற்சலாந்தில் வசிக்கும் ந.திருச்செல்வம் என்பவர் அன்பளிப்புச் செய்துள்ளார். (87)

# வரட்சி ஒழிப்புக்காக நதிகளை இணைக்க வாஜ்பாய் போர்க்கால அவசரத் திட்டம்!




(புதுடெல்கி)

இந்தியாவில் வரட்சியை ஒழிக்கவும் மாநிலங்களுக்கிடையே நதிகளை இணைக்கவும் போர்க்கால அடிப்படையில் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக பிரதமர் வாஜ்பாய் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வரட்சியைப் போக்க அரசாங்கம் போதிய கவனம் எடுக்கவில்லை என எதிர்க்கட்சிகள் மக்களவையில் குற்றஞ்சாட்டியதனை அடுத்து, கருத்து வெளியிடுகையிலேயே வாஜ்பாய் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பெரிய திட்டத்தினை நடைமுறைப்படுத்த போதிய நிதி அரசிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், ஓரிசா மாநிலத்தில் பட்டினியால் மக்கள் இறப்பதாக செய்தித்தாள்கள் சில செய்திகளைப் பிரசுரித்தாலும் அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை. நாட்டில் போதுமான தானியம் கையிருப்பில் இருப்பதாகவும், அவை மக்களுக்கு உரிய முறையில் போய் சேர்கின்றதா என்பதைத்தான் உறுதி செய்ய வேண்டும என்றும் கூறினார்.

கங்கை, காவிரி நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு உயர் மட்டக்குழு அமைக்கப்படவுள்ளது. இத்திட்டம் குறித்து எல்லா மாநிலங் களிடமும் கருத்து கேட்கப்பட இருக்கின்றது. நாடு சுதந்திரமடைந்து 55 ஆண்டுகளாகியும் 40 சதவீதமான விவசாய நிலங்களே நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றன. எனவே, இவ்விரு திட்டங்களுக்கும் கட்சி அரசியலை நோக்காகக் கொள்ளாது காங்கிரஸ் கட்சி உட்பட மற்றைய எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என வாஜ்பாய் கேட்டுள்ளார்.

# பஸ் மீது தற்கொலைத் தாக்கு பத்து இஸ்ரேலியர்கள் பலி



தாக்குதலுக்குள்ளான பஸ்

இஸ்ரேலில் மேற்கு ஜெருசலேத்தில் பஸ் மீது நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலினால், பத்து பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பன்னிரெண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

தற்கொலைத் தாக்குதல் நடந்த சமயம் பஸ்ஸில் 22 பொது மக்கள் இருந்துள்ளனர்.

கடந்த இரு வருடங்களாக பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலின் இலக்குகள் மீது தற்கொலைத் தாக்குதல்களைத் தொடர்ச்சியாக நடாததிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# அணுவாயுதக் கழிவுகளால் அவதியுறும் கஸகிஸ்தான்



அணுவாயுதக் கழிவுகளை எதிர்க்கும் ஆர்ப்பாட்டம் ஒன்று.

கஸகிஸ்தான் அணுவாயுதக் கழிவு தொடர்பாக பாரிய நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. வெளிநாடுகளின் அணுக்கழிவுகளை விட, சொந்த நாட்டில் அணு உற்பத்தி தொடர்பான கழிவுகளே கஸகிஸ்தானுக்கு கூடுதலான நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன.

அணுக்கழிவுகளை தனது நாட்டினது மலைஉச்சிகளில் புதைத்து வந்த அதேவேளை- பிற நாடுகளின் அணுக்கழிவுகளையும் அதே இடங்களிலேயே புதைக்க கஸகிஸ்தான் அனுமதித்தது. இதனால் 220 மில்லியன் தொன் அணுக்கழிவுகள் தற்பொழுது இம் மலைகளில் குவிக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றினை அகற்ற 1.1 பில்லியன் அமெரிக்கன் டொலர் தேவைப்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. கஸகிஸ்தான், சோவியத் கூட்டமைப்பிற்குள் ஒன்றாக இருந்த போது, சோவியத் ரஷ்யாவினது அணுக்கழிவுகளும் கஸகிஸ்தானில் புதைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அணுக் கழிவுகள் புதைக்கப்பட்டுள்ள மலை உச்சிகளுக்கு அண்மையில் வசிக்கும் மக்களிடையே புற்றுநோய் மற்றும் பிறப்பிலேயே குறைபாடுகள் உடைய குழந்தைகள் பிறக்கும் பாரிய பேரழிவை கஸகிஸ்தான் தற்போது சந்தித்து வருகிறது.

# ஈராக்குக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடுகின்றது அமெரிக்கா!

ஈராக் தொடர்பான நிலைப்பாட்டுக்கு உலக நாடுகளிடம் அமெரிக்கா ஆதரவு தேடிவருகிறது. அமெரிக்காவுக்கு, கனடாவும் பிரித்தானியாவும் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளதோடு, தமது இராணுவ வீரர்களையும் இராணுவத் தளபாடங்களையும் கொடுத்துதவ முன்வந்துள்ளன. இவ்விரு நாடுகளையும் விட, ஐரோப்பிய சமூக நாடுகளின் உதவியையும் அமெரிக்கா கோரியுள்ளது. 'விருப்புக்களின் கூட்டமைப்பு' என்னும் அமைப்பின் மூலம் தனக்கு அணிதிரட்ட, அமெரிக்கா இராணுவ உதவிகளைக் கோரியுள்ளதாக தெரியவருகின்றது. அத்துடன், ஈராக் மீது கூட்டு அழுத்தம் கொடுக்கும் வகையில் தான் ஈடுபடவே உலகநாடுகளின் உதவியை நாடியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.



படைகளைப் பலப்படுத்துவதில் அமெரிக்கா தீவிரம்

அதேவேளை - ஐக்கிய நாடுகள் பரிசோதனைக்குழுவிற்கு பூரண ஒத்துழைப்பினை ஈராக் வழங்கும் என ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் கோபி அனான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## மாவோ போராளிகளின் தாக்குதலில் 15 இந்திய பொலிஸார் பலி

வட இந்தியாவின் இரு வேறு இடங்களில் மாவோ போராளிகளின் தாக்குதலினால் பதினைந்து பொலிஸார் இறந்துள்ளனர். ஜார்க்கண்டில் எட்டு பொலிஸாரும், மணிப்பூரில் ஏழு பொலிஸாரும் இறந்துள்ளனர்.

கடந்த வாரம் மாவோ போராளிகள் ஆந்திரப் பிரதேசத்தில் புகையிரத நிலையம் ஒன்றினைக் குண்டு வைத்துத் தாக்கியபோதும் எவரும் காயப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், புகையிரத நிலையம் பாரிய சேதத்திற்குள்ளாகியது.

# இரவில் தெருக்களில் உறங்கும் 37 ஆயிரம் நியூயோர்க் வாசிகள்



(நியூயோர்க்)

நியூயோர்க் நகரில், வீடற்றவர்களின் எண்ணிக்கை தற்பொழுது என்றுமில்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, நியூயோர்க் நகர பிதா மைக்கேல் பிலும்வேர்க், பாவனையில் இல்லாத வர்த்தகக் கப்பல்களை வீடற்ற மக்களுக்கான குடியிருப்புக்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

கடந்த மாதம் நியூயோர்க் நகரத்தில் வீடற்ற மக்கள் 37 ஆயிரம் பேர், இரவு வேளைகளில் தெருக்களில் தூங்குவதாக புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், கடந்த வருடங்களில் உபயோகத்தில் இல்லாத விடுதிகள், சிறைச்சாலைக் கூடங்கள் மற்றும் கன்னியாஸ்திரிகளின் பாவனையில்லாத மடங்களை, வீடற்ற மக்கள் வதிவதற்கு வசதியாக, 18 வீடமைப்புத் தொகுதிகளாக நியூயோர்க் நகரசபை செப்பனிட்டுக் கொடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

# நேட்டோவில் இணைய மேலும் 7 நாடுகள் தயார்




பராகுவேயில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாட்டினைத் தொடர்ந்து, நேட்டோ விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. முன்னாள் சோவியத் கூட்டமைப்பில் இருந்த பல்கேரியா, எஸ்டோனியா், லட்வியா, இலினுவேனியா, ரோமானியா, சுலோவாக்கியா, சுலோவெனியா ஆகிய 7 நாடுகளே தற்பொழுது நேட்டோவில் இணையவுள்ளன.

புதிய நாடுகளின் இராணுவ பலத்தினைப் பொறுத்தவரையில், மிகவும் பலவீனமானவை என்பதனால், பழைய நேட்டோ அங்கத்துவ நாடுகள் புதிய அங்கத்துவ் நாடுகளுக்கு அவற்றின் இராணுவ பலத்தை விஸ்தரிக்க உதவ வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நேட்டோ விஸ்தரிக்கப்படவுள்ளதைத் தொடர்ந்து நேட்டோ கூட்டமைப்பின் அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை 26 ஆக உயரவுள்ளது.

நேட்டோ இராணுவக் கூட்டமைப்பு விஸ்தரிக்கப்பட்டால், அமெரிக்காவின் தீவிரவாதத்திற்கான போராட்டம் மற்றும் ஈராக் மீதான நடவடிக்கைகளில், நேட்டோ - இராணுவக் கூட்டமைப்பு என்பதிலும் மேலாக அரசியற் குழுவாகவும் பலம்பெறும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## உலகவலம்

### பேர்லினில் ஜக்ஸன்



உலகப் பிரபல்யம் வாய்ந்த பொப் இசைப்பாடகர் மைக்கல் ஜக்ஸன், பாம்பி - 2002 விருதைப் பெறுவதற்காக பேர்லின் வந்த போது, தான் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து, ஒரு குழந்தையுடன் ரசிகர்களுடன் அளவளாவும் காட்சி.

### படமும் செய்தியும்



ஆபிரிக்க நாடான புருண்டியில் அரசுக்கும் புரட்சிப்படைகளுக்கும் இடையிலான புதிய சண்டையில் 20,000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# வீதிகள், இறங்குதுறைகளை பாவனைக்கு அனுமதிக்குக

## இளம்பரிதி வடபிராந்திய தளபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில்- இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்கள், இறங்குதுறைகள், மற்றும் பொது வீதிகள் என்பவற்றை பொதுமக்களின் பாவனைக்கு மீளத் திறந்து விடக்கோரி, அவற்றின் பட்டியலுடனான கடிதமொன்றை, விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, வடபிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அனுப்பியுள்ளார்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டத்தலைவர் ஊடாக இக்கடிதம் நேற்று அனுப்பப்பட்டது. நேற்றுக் காலை யாழ்.போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடந்த சந்திப்பிலேயே இக்கடிதம் கையளிக்கப்பட்டது.

கடந்த 16ம் திகதி முகமாலையில் நடைபெற்ற பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான யாழ்.மாவட்ட உபகுழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுக்கமைய, மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்த இந்த துறைமுகங்கள், இறங்குதுறைகள் மற்றும் வீதிகளைத் திறந்து விடுமாறு கோரியே இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள 26 பிரதான வீதிகள் மக்கள் பாவனைக்கு திறந்து விடப்படாது தடுக்கப்பட்டுள்ளதாகவும் -

மீன்பிடித்துறைமுகங்களில், வடமராட்சியில் - 44 துறைகளும், காரைநகர்ப்பகுதியில் - 7 துறைகளும், பண்ணையின் கிழக்குப்பகுதியில்- 7 துறைகளும், பண்ணையின் மேற்குப்பகுதியில் - 5 துறைகளும் மக்கள் பாவனைக்குத் தடுக்கப்பட்டுள்ளதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவில்...

போராட்டத்தை தொடர்கின்றனர். சுழற்சி முறையிலான இப்போராட்டத்துக்கு உரிய பதில் கிடைக்காவிடின், சாகும்வரையிலான போராட்டத்தை ஆரம்பிப்போம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (112)

## ஈ.பி.டி.பி....

டனர். தப்பி ஓடியவர்களில் இருவர் நேற்று நண்பகல் முகாம் திரும்பினர்.

ஈ.பி.டி.பி முகாம் தாக்குதலுக்குள்ளானது தொடர்பான தகவல் கிடைத்ததும், அங்கு வந்த பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து தாக்குதலை நடத்தியோரைக் கலைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து ஈ.பி.டி.பி முகாமுக்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தபோதும், 3 பஸ்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் அலுவலகத்தைத் தாக்க முற்பட்டனர். பி.ப 2.15 மணியளவில் நடந்த இச்சம்பவத்தினைத் தொடர்ந்து மேலதிகப் பொலிசார் வரவழைக்கப்பட்டு தடியடிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் நால்வர் பலத்த தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரியவருகிறது. பொலிசாரின் தாக்குதலையடுத்து தாக்குதல் நடத்த முனைந்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டனர்.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

இத்தாக்குதல் குறித்து தகவல் வெளியிட்ட ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.மதனராஜன், இந்தத் தாக்குதலுக்குப் புலிகளின் ஆதரவுள்ள ஒரு குழுவே காரணம் எனவும், என்ன நடந்தாலும் இந்த மண்ணை விட்டு தாம் வெளியேறப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

## கோணேசர்....

ழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.திலக், நகரப்பகுதி அரசியல் பொறுப்பாளர் வி.ராஜேஷ், குச்சவெளிப் பொறுப்பாளர் வ.சிவகுமார், முக்கியஸ்தர் நீதன் ஆகியோருடன் மொழிபெயர்ப்பாளராக சட்டத்தரணி கா.சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படைத்தரப்பின் சார்பில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜனாப் அப்துல் மஜீத், திருகோணமலை இணைப்பதிகாரி ஜோன் சேனவீர, லெப்ரிணன்ட் கேணல் கே.பி.ஏ. ஜயசேகர, கேணல் லால் பெரேரா, வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் எஸ்.பி.வீரசேகர, கிழக்குப் பிராந்திய தளபதி றியர் அட்மிரல் எச்.எஸ்.ரட்ணகீர்த்தி, திருகோணமலை பிராந்தியக் கடற்படைப் பிரதித் தளபதி ஏ.எஸ்.திஸநாயக்க, விமானப்படை சார்பில் குரூப் கப்டன் கே.குணதிலக, ஜி.பி.புளத்சிங்கள ஆகியோருடன் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே ஆகியோர் கலந்து கொண்டனர். அரச நிர்வாகிகள் தரப்பில் - மாவட்ட அரசாங்க அதிபர் என்.பி.கே.நெலும்தெனிய, பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் சு.அருமைநாயகம், குச்சவெளி பிரதேச செயலாளர் கே.எஸ்.ஜெயச்சந்திரா, ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் ஏ.சிங்கராயர் ஆகியோரும் கலந்து கொண்டனர். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் ஜான் லீடங், அப்துல் புறுக்கான், பெக்கா விஹேர்வாஸ், ரியூட்டர்டோர் ஹெலசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட கருத்துத் தெரிவிக்கையில், இன்றைய கூட்டம் எதிர்பார்த்த வெற்றியை அளித்துள்ளது, பல விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற இடங்களில் வசித்த மக்கள் உடனடியாகத் தமது சொந்த இடங்களில் குடியேறலாம் எனவும் பெரும்பாலும் பல விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் கருத்துத் தெரிவிக்கையில், மூன்று விடயங்கள் பற்றி இன்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும், உயர் இராணுவ வலயங்களில் அமைந்துள்ள முகாம்களை அகற்றுதல், மக்களின் மீள் குடியேற்றம், தடை செய்யப்பட்ட பாதைகளைத் திறத்தல் என்பவையே அவையாகும் என்றார்.

முஸ்லிம்களின் மீளக்குடியமர்தல் பயிர்ச்செய்கை தொடர்பாக இடையூறு இருக்கக்கூடாது எனக் கோரப்பட்டது. தற்போது இவ்விடயத்தில் பிரச்சினைகள் இல்லை. தொடர்ந்தும் இதேநிலை இருக்கும் எனக்கூறப்பட்டது. சட்டரீதியான வியாபார நடவடிக்கைகளுக்கு நாம் இடையூறு விளைவிக்கமாட்டோம், எமது பிரதேசங்களில் சட்டரீதியற்ற எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளுக்கும் இடமில்லை என திலக வலியுறுத்திக் கூறினார்.

மேலும்- நாங்கள் எதிர்பார்த்த அளவில் இக்கூட்டத்தில் முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. எதிர்கால சந்திப்புக்கள் மூலமாக இவற்றை அடையலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. படையினர் எமது போராளிகளைக் கைது செயத போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுதங்கள் மீள எம்மிடம் ஒப்படைக்கப் படும் பட்சத்தில் நாங்களும் படையினரைக் கைது செய்தபோது எடுத்துக்கொண்ட ஆயத்தங்களையும் வாகனத்தையும் கையளிப்போம் எனவும் திலக் தெரிவித்தார். (04)

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD
AVAILABLE COURSES
MS OFFICE 2002
VISUAL BASIC 6.0
ORACLE 8.i
JAVA 2
HARDWARE
C++
Closing Date: 15.12.2002
Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposite of J/Hindu Primary School)

# வடகிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்தி; செயலகப் பணிப்பாளராக செல்வின்

(யாழ்ப்பாணம்)

வட கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி செயலகத்தின் பணிப்பாளராக எஸ்.செல்வின் நியமிக்கப் படவுள்ளார்.

தற்போது வடகிழக்கு மாகாண கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளராகக் கடமையாற்றிவரும் இவர் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மேற்படி பதவிப்பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி செயலகம் கிளிநொச்சியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு செயற்படவிருப்பது தெரிந்ததே.

இச்செயலகத்திற்கு மேலும் இரு பிரதிப் பணிப்பாளர்கள் நியமிக்கப் படவுள்ளனர். இவர்களில் ஒருவர் முஸ்லிம்கள் தரப்பில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளார். (க)

# நாகர்கோவில் வீதி திறப்பு குறித்து முடிவுகளின்றி முடிந்த சந்திப்பு!

## பாதுகாப்பே காரணம் என்கிறது படைத்தரப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி திறப்பது தொடர்பாக நடைபெற்ற கூட்டம் எந்தவித முடிவுகளும் இன்றி நேற்று முடிவடைந்தது.

பாதை திறப்பது தொடர்பாக எதிர்வரும் 16ம் திகதி நடைபெறவுள்ள பாதுகாப்பு உபகுழுக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கான சிபார்சுகள் மட்டுமே நேற்று முன்வைக்கப்பட்டன.

சூனியப்பிரதேசம் அமைப்பதில் இருதரப்பினருடனும் நீண்ட விவாதம் நடைபெற்றது.

நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசதரப்பில்- பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கரலியத்தை, குடாநாட்டுக்கான கட்டளைத்தளபதி சரத் பொன்சேகா, பிரிகேடியர் உபாலி எதிரிசிங்க ஆகியோரும்,

விடுதலைப்புலிகளின் சார்பில் யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நிர்வாக பொறுப்பாளர் இளஞ்சேரன், வலிகாமம் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்ரினன்ட் கேணல் இனியவன், வடபோர்முனை கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த லெப்ரினன்ட் கேணல் அறிவு, அரசியல்றதுறைப் பிரமுகர் அருணன், மருதங்கேணி பிரதேச செயலர் வி.பி.வேலாயுதபிள்ளை ஆகியோரும்,

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் பியர் சாண்டர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பருத்தித்துறை நாகர் கோயில் வீதி திறப்பது தொடர்பாக முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

இவ்வீதி திறப்பது தொடர்பாக அரசதரப்பில் பல பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. இவ்வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதைத் திருத்தி அமைக்க வேண்டும். தமது பாதுகாப்பு நிலைகளை மீள ஒழுங்கமைப்பதற்கு பெருமளவு நிதி தேவையாகின்றது. தமது புதிய பாதுகாப்பு நிலைகளை அமைப்பதற்கு இடவசதி பொருத்தமானதாக இல்லை. தேவையான அளவு சூனியப்பிரதேசம் அங்கு காணப்படவில்லை. ஆகிய விடயங்களை அரசதரப்பு பிரஸ்தாபித்தது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கும் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கும் இடையில் தற்போது காணப்படுகின்ற மிக குறுகிய இடைத்தூரம் போதுமானதாக இல்லையென்றும், எனினும்- படைத்தரப்பின் காவல் நிலைகளை பின் நகர்த்துவதற்கும் படைத்தரப்பினர் தயாராக இல்லையென்றும் புலிகளின் காவல் நிலைகளை பின்னகர்த்தியே சூனியப் பிரதேசத்தின் இடைத்தூரத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் நேற்றைய சந்திப்பில் படைத்தரப்பினர் கேட்டுக் கொணடனர். இவ்விடயம் தொடர்பாக இரு தரப்பினரும் காரசாரமாக விவாதித்த போதிலும் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனினும் இவ்விடயத்தை கருத்தில் எடுத்து பரிசீலிப்பதாக விடுதலைப் புலிகள் தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படாத போதும் கூட, ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பான சிபாசுகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பாதுகாப்பு உப குழுக்கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

(க,லி)

## ஸ்ரீதர் தியேட்டர்.....

பட ஆயத்தமாகியபோது அவர்களைப் பொலிஸார் தடுத்தனர். இதனால் பொலிஸாருக்கும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் எழுந்தது. பின் பல்கலைக்கழக மாணவர்கள், நாம் ஜனநாயக வழியில் போராடுகிறோம். எம்மை தடுக்க இயலாது எனத் தெரிவித்தபோது பொலிஸார் அகன்று சென்றனர்.

போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. அரை மணி நேரத்தின் பின் யாழ். பொலிஸ் அத்தியட்சகர் அப்பகுதிக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் உரையாடினார்.

மதியம் 12.30 மணியளவில் ஈ.பி.டி.பி தலைமை அலுவலகத்திற்கு முன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவாக அவ்விடத்தில் ஓட்டோ ஒன்று பிரசாரத்தில் ஈடுபட்ட போது கடமையிலிருந்த பொலிஸார் அதைத் தடுக்க முற்பட்டனர். இதனால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டது. எனினும் தொடர்ந்து ஓட்டோவில் இருந்தவாறு பிரசாரம் செய்யப்பட்டதுடன் எழுச்சிப் பாடல்களும் ஒலிக்கவிடப்பட்டன்.

நேற்றைய மறியல் போராட்டத்தின்போது ஈ.பி.டி.பி.யினருக்குப் பாதுகாப்பு வழங்க விசேட பொலிஸ் அணியொன்று ஈ.பி.டி.பி தலைமை அலுவலக வாயிலில் தரித்து நின்றது. போராட்டத்தில் ஈடுபடுவதற்குப் பொதுமக்களும் மாணவர்களும் பேரணியாக வந்தபோது, கலகம் அடக்கும் விசேட பொலிஸார் பதினைந்து பேர் வரையில் வாகனம் ஒனறில் வந்து ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு முன்பாக இறங்கி நின்றனர். இவர்கள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை ஏவும் துப்பாக்கிகளுடனும், குண்டாந்தடிகளுடனும், தடுப்புக் கவசங்களுடனும் காணப்பட்டனர்.

இப்பொலிஸ் படையணிக்கும் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் அடிக்கடி கருத்து முரண்பாடுகள் அங்கு ஏற்பட்டன.

கொட்டும் மழையின் மத்தியிலும் நான்கு மணித்தியாலங்கள் வரை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு பிற்பகல் 2.30 மணியளவில் அமைதியாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

இப்போராட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெறும் என மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (லி,60,111)

## ஈ.பி.டி.பியினரை....

கள் சிலர் நேற்றுப் நாடாளுமன்ற உணவறையில் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இதன் போது வடக்கு - கிழக்கில் செயற்படும் அரசியல் கட்சிகள் விடயத்தில் பொதுவான அடிப்படைவிதிகள் சிலவற்றை அறிமுகப்படுத்த வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டுக்கொண்டனர்.

இன்று - தமிழ்க் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. உட்பட்ட அனைத்துக் கட்சிகளையும் பிரதமர் சந்தித்துப் பேசவுள்ளதாக மற்றுமோர் தகவல் தெரிவிக்கின்றது.

ஒஸ்லோ மாநாட்டுக்கு முன்னர் ஒரு சுமுக நிலையை ஏற்படுத்துமுகமாகவே இச்சந்திப்பு நடைபெறுவதாக அத்தகவல் மேலும் தெரிவித்தது.

(01)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.24 | 96.70 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.70 | 153.16 |
| 1 யூரோ | 96.23 | 97.40 |
| 1 சுவிஸ் பிராங் | 65.40 | 66.42 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.31 | 54.29 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.74 | 25.74 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.